RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 06 ஒக்டோபர் 2023 இதழ்:- 21

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

CashPoint
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## இவர்களுக்கான "ஊட்டும் கரங்கள்" நிகழ்வுத் திகதி 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது



29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றக்கிழமை நடைபெற இருந்த ஊட்டும் கரங்கள் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை 6.00 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும். பொருளாதார நெருக்கடி, மழை கால ஆரம்பம், பிள்ளைகளின் கம்பளிப் போர்வை என பல்வேறு செலவுகள் அதிகரித்துள்ள இவ்வேளை கடந்த 11 ஆண்டுகளாக இவர்களுக்கான உணவுத் தேவையையும் கல்வித்தேவையும் பூர்த்தி செய்து வரும் கனடியத் தமிழ்ச் சொந்தங்கள் விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். விபரங்கள் 5ம். 12ம், 13ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச விசாரணை குறித்து ரணிலின் அதிரடி அறிவிப்பு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணைகள் அவசியம் என முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் குறித்த கேள்விக்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க சீற்றமடைந்து பதிலளித்துள்ளதுடன் சர்வதேச விசாரணையை நிராகரித்துள்ளார். (5ம் பக்கம் பார்க்க)



GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

## நீதிபதி சரவணராஜா அதிகாரங்களைப் பயன்படுத்த தவறி விட்டார் நீதி இல்லாத நாட்டின் நீதி அமைச்சர் விஜேதாச தெரிவிப்பு!



முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு யாராவது அழுத்தம் கொடுத்திருந்தால் அரசாங்கத்தை குறை கூறுவதை விடுத்து அது தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடருமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச எதிர்க்கட்சிக்கு சவால் விடுத்துள்ளார். (7ம்பக்கம்)

## வலிந்து மூக்கை நுழைத்த அலி சப்ரி



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
24/7 365
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

**SELLING OR BUYING A HOME?**

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com




HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N & Conlin Rd**



Oshawa $279,000
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

**Burnhamthorpe & Confederation**




Mississauga $619,990
Bedrooms: 1+1 Washrooms: 1
Indoor pool, gym, party/games rool

**Warden Ave / Enterprise Blvd**



Markham $749,000
Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407

**Dundas/Hurontario St**



Mississauga $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

**Mississauga Rd & Eglinton Ave**



Mississauga $1,193,000
Bedrooms: 3 Washrooms: 4
Closer to 403, 401, 407

**Lawrence & Morningside**




Scarborough $629,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

**Green Rd & Brookhill Blvd**




Clarington $999,990
Bedrooms: 3 Washrooms: 3
Spent $100,000 on Recently Reno.

**Markham Rd & Denison**



Markham $629,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

**Simcoe St / Buckingham Ave**




Oshawa $1,349,998
Bedrooms: 5 Washrooms: 4
Victorian Style home in Oshawa

**Main St & Danforth Ave**




Toronto $1,400,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Newly Renovated Spacious Home

**Woodbine Ave & Mt Albert Rd**



East Gwillimbury $1,500,000
Bedrooms: 3 Washrooms: 2
Approx. 90 Ft Of Frontage

**9th Line/14th Ave**



Markham $1,759,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

**Meadowvale / 401**



Scarborough $1,999,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

**Fletcherscreek Blvd/Bovaird Dr**



Brampton $3,500
Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!

**Brock Rd/William Jackson Dr**

FOR LEASE



Pickering $2,750
Bedrooms: 2 Washrooms: 3
Open concept main level

**Lawrence/Scar. Golf Club**

FOR LEASE



Scarborough $3,500
Bedrooms: 3+1 Washrooms: 2
Great neighbourhood

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போர்!



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்துத் தொடரும் பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராகவும் யாழ்ப்பாணத்தில் 04 ஒக்டோபர் 2023 புதன்கிழமை மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் நகர் வரையான போராட்டமாக இது நடைபெற்றது. இந்தப் போராட்டம் மருதனார்மடம் சந்தியில் காலை 9:30 மணியளவில் ஆரம்பமானது. சம நேரத்தில் கொக்குவில், கோண்டாவில் போன்ற பகுதிகளிலும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது அதன் போது கொக்குவில் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் உள்ளிட்டோர், நீதி தேவதையின் உருவ சிலைக்கு கறுத்த துணி கட்டி, நீதி தேவதையின் கையில் உள்ள தராசு ஒரு பக்கமாக தாழ்ந்து இருக்க கூடியவாறு, நீதி தேவதையின் உருவ சிலையை காட்சி படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

பின்னர் சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் என போராட்டத்தில் கலந்து கொண்டோர் நீதி தேவதையின் உருவ சிலைக்கு முன் மண்டியிட்டு, நீதி கோரினர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக்கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பனவற்றின் ஏற்பாட்டிலும் ஆதரவுடனும் இந்த மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி என்பனவும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கின.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை யின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி கே.சயந்தன், து.ரவிகரன், க.சர்வேஸ்வரன், பா.கஜதீபன், எஸ்.சுகிர்தன்

மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், மதத் தலைவர்கள், யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் உட்படப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். படங்கள் 22ம் பக்கம் பார்க்க

# நீதிபதி சரவணராஜா மனநலம் பாதிக்கப்பட்டவராம்! பாராளுமன்றத்தில் சரத்வீரசேகர அவதூறு!



முல்லைத்தீவு நீதிபதிக்கு நான் அச்சுறுத்தல் விடுத்திருந்தால் என்னை அந்த நேரத்திலேயே கைது செய்திருக்கலாம் என நாடாளுமன் உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் 2 ஆயிரம் வருடங்கள் பழைமையான எமது பௌத்த புராதனச் சின்னத்தில், பொங்கல் வைத்து வழிபட்ட நீதிமன்றம் அனுமதி அளித்தது. அப்போது முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் ரவிகரன், முல்லைத்தீவு நீதிபதியுடன் பேசிய காரணத்தினால், நானும் எனது கருத்துக்களை முன்வைக்க நீதிபதியிடம் அனுமதி கேட்டிருந்தேன்.

எனினும், எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நான் முன்னாள் இராணுவ அதிகாரி என்பதாலும், எனக்கு சட்டங்கள் தெரியும் என்பதாலும், நீதிபதியொருவர் கருத்து வெளியிட மறுத்தமையால், நானும் அமைதியாகிவிட்டேன்.

நாடாளுமன்றிலும், குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதியளித்தமை தவறு என்றும் இது இந்து பௌத்த மக்களிடையே தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று தான் கூறியிருந்தேன். இதனை நான் இன்றும் கூறுவேன். இது எப்படி அச்சுறுத்தலாகும்? அந்த சம்பவத்திற்குப் பின்னர் நான் குறித்த நீதிபதியை சந்திக்கக் கூட இல்லை.

முல்லைத்தீவு, நீதிபதிக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் 5 வழக்குகள் உள்ளன.இந்த வழக்குகள் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக் குழு ஊடாக தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சட்டமா அதிபரிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நிலையில், அவரது தீர்ப்பை மாற்றுமாறு ஒரு போதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது தெரிவித்துள்ளது. அப்படி அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருந்தால், அவர் இது தொடர்பாக பிடியாணையொன்ற பிறப்பித்திருக்கவும் முடியும்.

அவர் வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அவரது வாகனத்தை விற்பனை செய்து, வெளிநாட்டுத் தூதுவர்கள் இருவரை அவர் சந்தித்துள்ளார்.பொலிஸ் பாதுகாப்பும் அவருக்கு குறைக்கப்படவில்லை என பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவரது மனைவியோ, இவரால் தனக்கு தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுவதாக நீதிச்சேவை ஆணைக் குழுவில் முறைப் பாடொன்றையே அளித்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸிலும், இது தொடர்பாக(22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# முல்லைத்தீவு நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல்:- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிரடி உத்தரவு



குருந்தூர் மலை விவகாரத்தை விசாரணை செய்து வந்த முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரீ.சரவணராஜா, தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதாக குறிப்பிட்டு இராஜினாமா செய்தமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு விசாரணைக்கான உத்தரவு குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரீ.சரவணராஜா, அண்மை காலமாக கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்களுடன் மிக நெருக்கமான தொடர்புகள் வைத்திருந்ததாக புலனாய்வு பிரிவு ஜனாதிபதி அலுவலகத்திற்கு அறிக்கை சமர்பித்துள்ளது.

நீதவான் ரீ.சரவணராஜா தனக்கு உயிரச்சுறுத்தல் உள்ளதாக பொலிஸ் நிலையத்திலேயோ அல்லது நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவிலோ முறைப்பாடு அளித்திருக்கவில்லை. எனினும் நீதவான் ஒருவருக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. எனவே இது குறித்து முழுமையான விசாரணைகளை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட நீதவானுக்கு உள்ள உயிரச்சுறுத்தல் தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார். எவ்வாறாயினும் கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீதவான் ரீ.சரவணராஜா வெளிநாடொன்று சென்றுள்ளதுடன், அவர் தனது இராஜினாமா கடிதத்தை 23 ஆம் திகதி சனிக்கிழமை நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளார்.

இதேவேளை சட்டமாதிபர் குறித்து நீதவான் ரீ.சரவணராஜா தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க சட்டமாதிபரிடம் வினவியுள்ளார்.

நீதவான் ரீ.சரவணராஜாவை பிரதிவாதியாக சுட்டிக் காட்டி மேன்முறையீட்டு நீதின்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் ஆஜராகுமாறு நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு ஊடான கோரிக்கைக்கு அமைவாக நீதவான் சரவணராஜாவுடன் கலந்துரையாடியதாக இதன் போது சட்டமாதிபர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் சட்டமாதிபர் திணைக்களத்தின் சிரேஸ்ட சட்டத்தரணிகள் மூவரின் முன்னிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரீ.சரவணராஜாவுடன் சட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியதாகவும், இந்த வழக்கில் பிரதிவாதியாக முல்லைத்தீவு நீதவானை பெயிரிட்டமை தவறு என்பதை நீதவான் சார்பில் ஆஜராகிய தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டதாகவும் சட்டமாதிபர் ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

மறுப்புறம் முல்லைத்தீவு நீதவான் வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் சிலவற்றுடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளதாக புலனாய்வு பிரிவு ஜனாதிபதி அலுவலகத்திற்கு அறிவித்துள்ளது. எனவே முல்லைத்தீவு நீதவான் குறித்த விடயத்தில் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து கூடிய விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இது இவ்வாறிருக்க நீதிபதி சரவணராஜா குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டமை சம்பந்தமாக விசாரணைகள் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெ பற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக, நீதிபதிக்கு காணப்பட்ட உயிரச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் சம்பந்தமான முழுமையான விசாரணைகளை தற்போது பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இந்த விசாரணைகளுக்கு புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களும் பயன்படுத்தப் படவுள்ளன. விரைவில் முழுமையான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப் படவுள்ளது என்றார்.

இதேவேளை நீதித்துறை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் வன்முறைகள் இடம் பெறுவதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்த ஊடக அறிக்கையை BASL தலைவர் கௌசல்யா நவரத்ன மற்றும் அதன் செயலாளர் இசுரு பாலபடபெந்தி ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு நீதவானின் இராஜினாமா இலங்கையில் நீதித்துறை அதிகாரிகளின் பாதுகாப்பு குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பக்கூடும் என்று BASL எச்சரிக்கை விடுத்துள்ளது.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா - அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# சர்வதேச விசாரணை குறித்து ரணிலின் அதிரடி அறிவிப்பு!



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணைகள் அவசியம் என முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் குறித்த கேள்விக்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க சீற்றமடைந்து பதிலளித்துள்ளதுடன் சர்வதேச விசாரணையை நிராகரித்துள்ளார். ஜேர்மனியின் Deutsche Welle. ஊடகத்திற்கான நீண்ட பேட்டியின் போதே ரணில் விக்கிரமசிங்க சர்வதேச விசாரணைகளை முற்றாக நிராகரித்துள்ளார்.

நீங்கள் அர்த்தமற்ற விதத்தில் பேசுகின்றீர்கள் – உங்களிற்கு என்னிடம் இந்த கேள்வியை கேட்க உரிமையில்லை – நீங்கள் இலங்கையர்கள் இரண்டாம்தர பிரஜைகள் என கருதுகின்றீர்களா? என ஊடகவியலாளருடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்ட ரணில்விக்கிரமசிங்க ஒரு கட்டத்தில் பேட்டியை முடித்துக்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உள்ளிட்ட எந்தவொரு விடயம் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையை மேற்கொள்ளாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் பிரித்தானிய ஊடகமான சேனல் 4 வெளியிட்ட ஆவணப்படத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் அவர் கடுமையாக சாடியுள்ளார். குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்கு நீதிபதி, முன்னாள் விமானப்படை தளபதி மற்றும் பிரபல சட்டத்தரணி ஆகியோர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த குழுவின் பலம் தொடர்பில் சந்தேகம் எழுப்பியதுடன், இலங்கை கத்தோலிக்க திருச்சபை சுயாதீன விசாரணை கோருவது குறித்து ஊடகவியலாளர் வினவிய போது ஜனாதிபதி அவரை வசைபாடியதுடன், இந்த கேள்வியினை என்னிடம் கேட்பதற்கு நீங்கள் யார் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் மேற்குலக நாடுகள் இலங்கையை மூன்றாம் தர நாடு போன்று கருதுவதாகவும், அந்த அடிப்படையிலே ஊடகவியலாளர் கேள்வி எழுப்புவதாகவும் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார். இதனிடையே, Deutsche Welle ஊடகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஊடகவியலாளரின் கேள்விகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் இடையூறு விளைவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேர்காணலில் இருந்து வெளியேறுவதாகவும் அறிவித்ததனையும் அவதானிக்க முடிந்தது.

# இவர்களுக்காக.... 28 ஒக்டோபர் 2023





என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே!

திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் எதிர்வரும் 28 ஒக் 2023 சனிக்கிழமை நடைபெற்றவுள்ள ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் (விபரங்கள் 12ம் 13ம் பக்கம் பார்க்க)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனிமனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த்தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண்ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்களால் முடிந்தளவு பங்களிப்பை எம்முடன் தொடர்பு கொண்டு வழங்குமாறும் உங்கள் பெயர், விபரங்கள் ஈழநாடு பத்திரிகையிலும் முகநூலிலும் தவறாது வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

எம் தேசத்தின் எதிர்காலச் சந்ததி எம் மண்ணில் நிம்மதியாக சிறப்பாக வாழ வழி சமைப்போம்! வாரீர்!

**விழா நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத நிலையில் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இரண்டு கருணையுள்ளங்களான வாகீசன் குடும்பம், தயாபரன் குடும்பம் இணைந்து 100.00 டொலர்களும்**

**திருமதி சரோஜினிதேவி கணேசலிங்கம் 100.00 டொலர்களும் வழங்கியுள்ளனர். (தொடரும்)**

தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# நீதிபதி சரவணராஜா அதிகாரங்களைப் பயன்படுத்த தவறி விட்டார் நீதி இல்லாத நாட்டின் நீதி அமைச்சர் விஜேதாச தெரிவிப்பு!

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு யாராவது அழுத்தம் கொடுத்திருந்தால் அரசாங்கத்தை குறைகூறுவதை விடுத்து அது தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடருமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச எதிர்க்கட்சிக்கு சவால் விடுத்துள்ளார்.

நீதித்துறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. வசதிகளை வழங்குதல் மற்றும் சட்டங்களை இயற்றும் வேலையைத் தான் அரசாங்கம் செய்கிறது என அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். முல்லைத்தீவு நீதிபதியின் தீர்ப்பை மாற்றுமாறு அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல கூறிய போதே நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தனக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் தான் பதவியை இராஜினாமா செய்வதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிற்கு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் அறிவித்ததாக நீதியமைச்சர் தெரிவித்தார். அவருக்கு அவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டால் அவர் நாட்டை விட்டுச் சென்ற பின் முறைப்பாடு செய்திருக்கலாகாது. அரசியலமைப்பின் பிரகாரம், தன்னை அச்சுறுத்திய நபருக்கு அழைப்பாணை விடுத்து அவரை மன்றுக்கு முன் ஆஜராக செய்யவும் அல்லது பிடியாணை பிறப்பிக்கும் அதிகாரமும் அவருக்கு உள்ளது. மேலும் குறித்த நபருக்கு எதிராக வழக்குத்



தாக்கல் செய்து அவரைத் தண்டிக்கவோ இல்லாவிட்டால் மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றத்திற்கு இது குறித்து தெரியப்படுத்தியிருக்க முடியும். தனது அதிகாரங்களை அவர் பயன்படுத்தா விட்டால் அதற்கு அவர் தான் பொறுப்புக்கூற வேண்டும் என நீதியமைச்சர் தெரிவித்தார்.

நீதிபதி சம்பந்தமான விவகாரத்தில் தலையிட அரசாங்கத்திற்கு எதுவித அதிகாரமும் இல்லை. நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிற்கே இதைக் கையாளும் அதிகாரம் உள்ளது. இது தொடர்பில் யாருக்காவது ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அவர்கள் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யலாம் என அமைச்சர் விஜயதாஸ தெரிவித்தார்.

# சுமந்திரன் போல சாதாரண பிரஜை பேசியிருந்தால் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும்!

நாடாளுமன்றத்தில், சுமந்திரன் பேசியதைப் போன்று சாதாரண பிரஜை ஒருவர் பேசியிருந்தால் அவருக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச எச்சரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன் வைத்து உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் விவகாரம் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்றார்.

இதன் போது எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 2020.10.20 ஆம் திகதி நாடாளுமன்ற உரை ஊடாக நீதிமன்றத்தை கடுமையாக விமர்சித்தார். உயர்நீதிமன்றம் பயனற்றது,உயர்நீதிமன்றத்தில் உள்ளவர்கள் வீடு செல்ல வேண்டும்' என்று கடுமையாக விமர்சித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் வழக்கு விவகாரத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி நவாஸ் கட்டளைப் பிறப்பித்ததாக இவர் (சுமந்திரன்) குறிப்பிட்டார்.



நாடாளுமன்ற சிறப்புரிமை ஊடாக நீதிமன்றத்தை மலினப்படுத்தினார். இவரை போன்று எவரும் நீதிமன்றத்தை கடுமையாக விமர்சிக்கவில்லை. இன்று நீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பில் கருத்து தெரிவிக்கிறார்.

எம்.ஏ.சுமந்திரனை போன்று நீதிமன்ற கட்டமைப்பை பிறிதொருவர் விமர்சிக்கவில்லை. பிறிதொருவர் விமர்சித்திருந்தால் இன்று அந்த நபர் கடூழிய சிறை தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பார். இவரே (சுமந்திரனை நோக்கி) நீதிமன்றத்தை மலினப்படுத்தினார் என்று சாடினார். இதன்போது எழுந்து உரையாற்றிய எம்.ஏ.சுமந்திரன் நான் குறிப்பிட்ட விடயத்துக்கு பொருத்தமற்ற வகையில் நீதியமைச்சர் உரையாற்றுகிறார். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் நீதியமைச்சர் முறையாக பதிலளிக்கவில்லை என்றார்.

# நீதிபதி சரவணராஜா கண்காணிக்கப்பட்டுள்ளார் என்பதை நீதி அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளது வெட்கித் தலைகுனியும் செயல்

நீதிபதி சரவணராஜா பின்தொடரப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தனது கூற்றுக்களின் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார் என்று சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் நீதிபதி ஒருவர் அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு பதவி நிலைகளை தூக்கியெறிந்து நாட்டை விட்டு வெளியேறியிருப்பதையிட்டு அரசாங்கம் வெட்கித் தலைகுனிய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

உயிரச்சுறுத்தல், அழுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ள நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் சம்பந்தமாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஊடகங்களுக்கு சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவருடைய கருத்தின் பிரகாரம், நீதிபதி வாகனத்தை விற்பனை செய்தமை, தூதுவர்களைச் சந்தித்தமை போன்ற செயற்பாடுகள் ஊடாக நீதிபதி திட்டமிட்ட வகையில் தான் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக காண்பிப்பதற்கு முயல்கின்றார். அத்துடன், நீதிபதிக்கு அச்சுறுத்தல் காணப்பட்டால் அது தொடர்பில் முறைப்பாடுகளை செய்யவும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அதிகாரங்கள் இருப்பதாகவும் கூட நீதி அமைச்சர் கூறியிருக்கிறார். அவ்வாறான நிலையில் நீதிபதி சரவணராஜா கொழும்புக்கு வருகை தந்தமை, அவர் வாகனத்தை விற்பனை செய்தமை, தூதுவர்களை சந்தித்தமை உள்ளிட்ட விடயங்கள் சாதாரணமா னவை.




நாட்டில் வாழ முடியாத ஒரு நிலைமை காணப்படுகின்ற போது, பாதுகாப்பாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சிகளை எடுக்கின்ற ஒரு சதாரண நபர் கூட இவ்விதமான செயற்பாடுகளையே மேற்கொள்வார்.

இந்நிலையில் நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக இருந்த சரவணராஜா நிச்சயமாக அமைதியான முயையில் தனது பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தி அச்செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், நீதியமைச்சரின் கூற்றானது மற்றொரு விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது, நீதிபதி சரவணராஜா பின்தொடரப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதே அந்த விடயமாகும்.

குருந்தூர்மலை விவகாரத்தில் முக்கியமான தீர்மானங்களை அறிவித்த அவரை சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றுக்குள்ளும், வெளியிலும் அச்சுறுத்தினார்கள். அதனோடு, அவர் புலனாய்வாளர்களால் பின் தொடரப்பட்டும் வந்தார். அதற்கான தகவல்களும் உள்ளன.

இவ்வாறான நிலையில் நீதியமைச்சரின் கூற்று அந்த விடயங்களுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக காணப்படுகின்றது. இவ்விதமான நிலைமையில் உள்ள ஒரு நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதும், அதியுச்சமான அழுத்தம் ஏற்படுவதும் தவிர்க்க முடியாதவொரு விடயமாகும். அது மட்டுமன்றி, புலனாய்வாளர்களே அவரைப் பின் தொடர்கின்ற போது, பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதானது, திருடனின் தயாரிடம் திருடன் குறித்து வெற்றிலைச் சாத்திரம் கேட்பதற்க ஒப்பானதாகும். ஆகவே, இலங்கை நீதித்துறையின் நீதிபதி ஒருவர் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியமைக்காக அரசாங்கம் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

மேலும், உள்நாட்டு பொறிமுறைகளால் எவ்விதமான நியாயங்களும் கிடைக்காது என்பதும் உறுதியாகி விட்ட நிலையில் சர்வதேச ரீதியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையின் நியாயம் மீண்டும் வலுப்பெற்றுள்ளது என்றார்.



இதேவேளை நீதித்துறையை சுதந்திர. மாக செயற்பட வைக்க வேண்டும் என்பது ஒரு அரசாங்கத்தினுடைய கடமையாக காணப்படுகின்றது என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீதித்துறைக்கு பங்கம் ஏற்படும் விதத்திலே, நீதியை நடைமுறைப்படுத்தும் நீதித்துறைக்கு பங்கம் ஏற்படும் விதத்திலே யாராவது நடந்து கொண்டால் உடனடியாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர நீதிபதிக்கு தொல்லைகள் கொடுக்கக் கூடாது. ஆனால் இலங்கையில் நடைபெறுவது இவ்வாறான செயற்பாடுகள் அல்ல எல்லாமே ஒரு சிங்கள பௌத்த சிந்தனையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என தெரிவித்துள்ளார்.


## தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

# Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# நீதிபதி சரவணராஜா விடயத்தில் கரிசனை!

## சட்டத்தரணிகள் சங்கத்திடன் பிரதம நீதியரசர் தெரிவிப்பு!



நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக உண்மைகளை கண்டறிவது தொடர்பில் முழுமையான கரிசனை கொள்ளப்படும் என்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌவல்ய நவரத்ன தலைமையிலான நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். தவபாலன் ஆகியோருக்கும், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு 01 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை காலை நடைபெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக செயற்பட்ட ரி.சரவணராஜா, நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அவ்வாறு அவர் வெளியேறுவதற்கு காரணமாக குறிப்பிடப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர்ச்சியான அழுத்தம் ஆகிய விடயங்கள் சம்பந்தமாக பிரதம நீதியரசரின் கவனத்துக்கு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினர் கொண்டு வந்திருந்தனர்.

அத்துடன், குறித்த விடயம் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பேசுபொருளாகியுள்ளதோடு நாட்டின் நீதித்துறையின் மீதும் மிகப் பாரிய கரும்புள்ளி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மீதான விசனம் ஒட்டுமொத்தமாக நீதித்துறையை அகௌரவத்துக்கு உள்ளாக்குவதோடு, அச்சுறுத்தும் நிலைமையும் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் சட்டத்தரணிகள் சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆகவே இவ்விதமான நிலைமைகள் தொடராது முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமாக இருந்தால், ரி.சரவணராஜாவின் வெளியேற்றம் சம்பந்தமாக உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்த வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கத்தினர் எடுத்துரைத்தனர்.

இதனையடுத்து, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, குறித்த விடயத்தில் முழுமையான கரிசனை கொள்ளப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதிபடத் தெரிவித்தார். இதனையடுத்து, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்னவின் கையொப்பத்துடன் நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு ஏற்படுத்தப்பட்ட உயிரச்சுறுத்தலுக்கு காரணமானவர்களை தாமதமின்றி கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும், அவருக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பிலும் உண்மையான நிலைமைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை கோரியும் இரு வேறு கோரிக்கை கடிதங்கள் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரட்ன மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# இலங்கையின் நீதித்துறைக்கு கழுவ முடியாத கறை!

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ள செய்தி இலங்கையின் நீதி துறைக்கு கழுவு முடியாத கறையாக படிந்துள்ளது. நீதித்துறை மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை உடைக்கப்பட்டுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும். அண்மையில் தனக்கான (நீதிபதிக்கான) பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ள அவர் தான் நீதிபதி பதவியினை இராஜினாம் செய்துள்ளார். இந்த நிலைமை இலங்கை நீதித்துறைக்கு மிகப்பெரும் அவமானம் என்பதோடு, தமிழ் மக்கள் இலங்கையின் நீதித்துறை மீது முழுமையான நம்பிக்கை இழக்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லும் சம்பவமாகவும் காணப்படுகிறது.

எனவே இவ்வாறான நிலைமைகள் இனியும் நாட்டில்



இடம் பெறாத வகையில் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதோடு, நீதிதுறை பணியாளர்களின் சுதந்திரமான பணிகளுக்கும் அச்சுறுத்தல் இல்லாத சூ ழல் உருவாக்கப்படல் வேண்டும். தவறின் நாடு மேலும் மேலும் நெருக்கடியான சூ ழல் நிலைக்குள் தள்ளப்படுவதோடு, எக்காலத்தில் நிலையான சமாதானமும், இனங்களுக்களுக்கிடையே நல்லிணக்கமும் ஏற்படாது போய்விடும் என முன்னாள் நாடாளுடன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேசம் என்ன செய்யும்?

முல்லைத்தீவு நீதிபதியின் பணி விலகல் இலங்கையின் அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. நேற்று வரையில் சனல்4 விவகாரத்தை முன்வைத்து விவாதித்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் தற்போது இலங்கையின் நீதித்துறை தொடர்பான விவாதங்களுக்கு மாறியிருக்கின்றார்கள்.

இலங்கையின் நீதித்துறையிலுள்ள அரசியல் அதிகார குறுக்கீடுகள் எவையும் புதியவையல்ல இதேவேளை, ஆச்சரியமானவையுமல்ல. ஆனால், அதனை காரணம் காண்பித்து ஒரு தமிழ் நீதிபதி பதவி விலகுவதாக அறிவித்திருப்பதும் நாட்டை விட்டு வெளியேறியிருப்பதும் சாதாரணமாகக் கடந்து செல்லக்கூடிய விடயமில்லை தான். இது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களின் வழமையான எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர்.

குருந்தூர்மலை விவகாரத்தில் சரத் வீரசேகர மற்றும் தென்னிலங்கையின் அடிப்படைவாத சக்திகள் தொடர்ந்தும் சத்தமிட்டவாறே இருந்தன. பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதிபதியை எச்சரிக்கும் வகையிலான கருத்துகளையும் சரத் வீரசேகர வெளியிட்டிருந்தார்.

சரத் வீரசேகர போன்றவர்களுக்கு தென்னிலங்கையில் எவ்வாறான செல்வாக்கு இருக்கின்றது என்பதற்கு அப்பால், அவ்வாறான சிறிய குழுவினரே பெரும் பான்மையினரின் அரசியல் நகர்வுகளை தீர்மானிப்பவர்களாக மாறிவிடுகின்றனர். இது தான் இலங்கை சிங்கள அரசியலின் சாபக்கேடு.

தென்பகுதியிலுள்ளவர்கள் என்ன தான் அரசியல் விவாதங்களை செய்தாலும் கூட, இறுதியில் அனைவரும் சரத் வீரசேகர போன்றவர்களின் கூக்குரல்களுக்கு தலையசைப்பவர்களாகவே இருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான் அழுத்தங்களை எதிர் கொண்டதாகக் கூறி நீதிபதி ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்.

அழுத்தங்களை எதிர்கொள்பவர்கள் பதவியிலிருந்து விலகி செல்வதன் மூலம் பிரச்னைகளை எதிர்கொள்ள முடியாது மாறாக, பிரச்னைகளை அம்பலப்படுத்துவதற்கான ஒரு கருவியாக அதனை கைக்கொள்ளலாம் ஆனால் அதனையும்கூட நாம் ஊக்குவிக்க முடியாது ஏனெனில் இதனை ஒரு வாய்ப்பாகக் கருதி ஏனையவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முயற்சிக்கலாம்.

தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் அதனால் சரத் வீரசேகர போன்றவர்களுக்கு என்ன தீங்கு ஏற்படப் போகின்றது? தென்னிலங்கையை பொறுத்த வரையில் மகிழ்ச்சியான விடயம் தான் ஏனெனில், ஏற்கனவே வடக்கு கிழக்கிலிருந்து 13 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளியேறி விட்டனர்.

இவ்வாறான பிரச்சனைகள் வெளிவருகின்ற போது எங்களுக்கு முன்னால் இருக்கின்ற ஒரேயொரு பதில் சர்வதேசம் இதில் தலையீடு செய்ய வேண்டும். நீதிபதி விடயத்தில் சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டுமென்று சம்பந்தன் கூறுகின்றார். இலங்கையில் இடம் பெறும் விடயங்கள் அனைத்தையும் சர்வதேச சமூகமென்று நாங்கள் நம்பிக் கொண்டிருப்பவர்கள் எங்களை விடவும் அறிவர்.

கொழும்பிலுள்ள தூதரகங்கள் அனைத்தையும் அவதானித்துக் கொண்டு தான் இருக்கின்றன. ஆனாலும் நாங்கள் எதிர்பார்த்தவாறு விடயங்களில் முன்னேற்றங்கள் இடம்பெறவில்லை. அவ்வாறாயின் சர்வதேசத்தை நோக்கி தமிழர் செயல்பாடுகளும் புத்தாக்கம் மிக்கதாக மாற வேண்டும்.

தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் சர்வதேசத்தை நோக்கிய செயல்பாடுகள் ஒருங்கிணைந்ததாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற வேண்டும்.

# கோத்தாவுகடகு அருகில் இருப்பதைத் தவிர்த்த சந்திரிகா



சீன மக்கள் குடியரசின் 74ஆவது ஆண்டு நிகழ்வு கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் இடம் பெற்றது. இதன்போது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இலங்கையின் சீனத் தூதரகம் அழைப்பு விடுத்திருந்தது. இதில் சந்திரிகா பண்டாரநாயக்க ரணதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அதாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதிகளில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படையில் இவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவர்கள் நால்வருக்கும் ஒரே மேசையில் அமர்வதற்கான நான்கு நாட்காலிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தான் கோத்தாபய அருகில் அமர்வதை விரும்பாது அருகிலுள்ள மேசையை தனக்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டதாக ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கியு சென்ஹொங் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் மிக முக்கிய பிரமுர்கள் வரிசையில் இந்த நால்வரே பிரதானமாக இடம் பிடித்திருந்தனர்.

சீனத் தூதுவர் இந்த நால்வரின் ஆசனங்கள் குறித்து அதிக சிரத்தை எடுத்ததாகத் தெரிகின்றது. எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அருகில் கோத்தாபயவின் ஆசனம் இருந்ததால் சந்திரிகா அவர் அருகில் அமர்வதை விரும்பியிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சி காலத்தில் ரணில் மற்றும் மைத்ரியுடன் இணைந்து பயணித்த சந்திரிகா இடையில் மைத்ரி மகிந்தவை திடீரென பிரதமராக்கி நாடாளுமன்றத்தை கலைத்தவுடன் அவரை கடுமையாக விமர்சித்திருந்தமை முக்கிய விடயம். எனினும் சுதந்திர கட்சியின் தலைவராக அந்நேரம் மைத்திரி இருந்த காரண த்தினால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதேவேளை தான் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்த மகிந்தவும் அதன் பிறகு சந்திரிகாவை ஓரங் கட்டி விட்டு சுதந்திர கட்சியின் தலைமை பொறு ப்பை கைப்பற்றினார்.

கோத்தாபய ஜனாதிபதியாவதை ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்தவர் சந்திரிகா. அவர் இடையில் நாட்டை விட்டு வெளியேறியவுடன் ஜனாதிபதி பதவிக்கே இழுக்கு ஏற்படுத்தியவர் என சந்திரிகா ஒரு சந்தர்ப்பத்தில் கோத்தாபயவை விமர்சித்திருந்தார்.

கூறப்போனால் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த, மைத்ரி, கோத்தாபய ஆகிய மூவர் மீதும் சந்திரிகா வெறுப்புடனேயே இருக்கின்றார். எனவே, அன்றைய நிகழ்வில் இந்த மூன்று பேருடனும் அமர்வதற்கு அவர் விரும்பியிருக்கவில்லையென்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா விவகாரம்:- சர்வதேசத்தின் பங்களிப்புடன் முறையான விசாரணை தேவை - சம்பந்தர் வலியுறுத்து

நீதிபதி சரவணராஜாவுக்கு நேர்ந்த நிலைமைக்கு வன்மையான கண்டனத்தினை தெரிவித்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், சர்வதேசத்தின் பங்களிப்புடன் முறையான விசாரணை தேவை என்றும் வலியுறுத்தியுள்ளார்.

நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்குள்ளாக்கப்பட்டால் நாட்டின் நல்லாட்சி, ஜனநாயகம் சீர்குலைந்து சர்வதேசத்தால் ஒதுக்கப்படும் நிலைமை உருவாகும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து செயற்பட வேண்டமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல், அழுத்தங்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிபதியாக பணியாற்றிய ரி.சரவணராஜா தான் வகித்த அனைத்துப் பதவிகளிலும் இருந்து இராஜினாமச் செய்து நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார். அவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாக நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நேர்ந்த நிலைமைகளுக்கு எமது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அரசாங்கம்



இந்த விடயம் சம்பந்தமாக முறையான விசாரணையொன்றை சர்வதேசத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

அதன்மூலமாகவே அரசாங்கம் தனது வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறு இல்லாது விட்டால் நாட்டின் அபிமானம் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டு சர்வதேசத்தினால் ஒதுக்கப்படும் நிலைமையே உருவாகும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் நல்லாட்சி, ஜனநாயகம் உள்ளிட்ட முன்னேற்றகரமான விடயங்கள் நீதித்துறையின் சுயாதீனத்திலேயே தங்கியுள்ளது என்பது அடிப்படையானதாகும். அவ்வாறான நிலையில் நீதித்துறையின் சுயாதீனத்தினை கேள்விக்குட்படுத்தும் வகையில், நீதிபதிகள், சட்டத்தரணிகளின் சுயாதீனமான செயற்பாடுகளில் தலையீடுகளைச் செய்வதும், தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகளை எடுப்பதும் பாரதூரமான செயற்பாடுகளாகும்.

இலங்கையில் நீதித்துறையின் மீதான தலையீடுகள் மற்றும் அழுத்தங்கள் சம்பந்தமான நிகழ்வுகள் தொடர்ச்சியான இடம் பெற்று வருகின்ற நிலையில் நாட்டில் மக்கள் ஆட்சித் தத்துவத்தை உறுதி செய்வதற்காக அரசாங்கம் அவை மீள நிகழாமையை உறுதி செய்வதோடு விடயங்களுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது அவசியமாகின்றது என்றார்.


முல்லைத்தீவு புனிதபூமி
அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
12 ஆண்டுகளாக நடாத்தும்
“ஊட்டும் கரங்கள்” இன்னிசை மாலை நிகழ்வு
28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை மாலை 6.00
ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE - TORONTO
(VICTORIA PARK & CONSUMER RD)

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# சட்டம் சவக்கிடங்கில்! நீதியின் விலை என்ன?

**கட்டுரையாளர்: கனடாவில் இருந்து – பனங்காட்டான் –**

**சட்டமா அதிபரின் அழைப்பின் பேரில் நீதிபதி சரவணராஜா அவரைச் சந்தித்தாரா? அல்லது தாமாகவே சென்று சட்டமா அதிபரை நீதிபதி சந்தித்தாரா என்பதல்ல இன்றுள்ள கேள்வி. இந்தச் சந்திப்பின்போது முன்னைய நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்குமாறு நீதிபதியிடம் சட்டமா அதிபர் கோரினாரா இல்லையா என்பதற்கான உண்மையான பதிலே இன்று உண்மையாக வேண்டப்படுகிறது.**

தமிழர்களின் இனப்பிரச்சனைத் தீர்வு என்பது மாகாண சபை நிர்வாகம், அதற்கான தேர்தல், 13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைபடுத்துதல், இந்திய பிரதமரைச் சந்திக்க பயணம் மேற்கொள்ளுதல் என்றவாறு இழுபட்டு இறுதியாக குருந்தூர் மலை ஆலய விவகாரத்தில் நின்றது.

இப்போது இதன் அடுத்த கட்டமாக முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகலுக்கான காரணங்களை முன்னிறுத்தி செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளது. அநேகமாக தமிழ்த் தேசிய பரப்பின் சகல அரசியலாளர்களும் அவர்களின் கட்சிப் பிரமுகர்களும் இது விடயமாக தங்களின் கண்டனங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். அடுத்த சில நாட்களுக்கு இது தொடரும் வாய்ப்புண்டு.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இந்த மாதம் (அக்டோபர்) 13ம் திகதிவரை இடம் பெறவுள்ளதால் அதன் பக்க அமர்வுகளிலும் இவ்விவகாரம் முன் வைக்கப்படலாம்.

நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல், அவமதிப்பு, அழுத்தங்கள் காரணமாக தமது பதவியைத் துறந்து விட்டு நாட்டை விட்டு வெளியேற நேர்ந்த நிலைமைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் புதன் கிழமை மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்த கூட்டாக முடிவெடுத்துள்ளனர். இதன் பின்னர் முல்லைத்தீவை முடக்கும் போராட்டத்தை நடத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.


இப்போராட்டங்கள் தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் தொடரக்கூடிய சூழ்நிலை உண்டு. சனல்-4 வெளிப்படுத்திய ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பிரச்சனை தென்னிலங்கையில் சில காலத்துக்கு மறந்து போக முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் விவகாரம் உதவலாம்.

குருந்தூர்மலை ஆலயப் பகுதியை தொல்பொருள் திணைக்களம் கைப்பற்றியதும், இங்கு புதிய பௌத்த விகாரையொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்ததும், குருந்தூர்மலை பொங்கல் வழிபாட்டை காவற்துறையினரின் பலத்துடன் பௌத்த பிக்குகள் குழப்பியடித்ததும் என தொடர்ச்சியான பல சம்பவங்களின் பின்னணியில் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை நாடினர்.

நீதிமன்றமாவது நீதி வழங்கலாம் என்ற நம்பிக்கை வீண் போகவில்லை. மறு அறிவித்தல் வரை விகாரை அமைக்க நீதிமன்றம் தடை விதித்தது. ஆனால் அந்தத் தடையை மீறி பொலிஸ் - ராணுவ பாதுகாப்புடன் விகாரை நிர்மாணம் இடம்பெற்றது.

இது தொடர்பான புகாரின் அடிப்படையில் முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா கடந்த யூலை நடுப்பகுதியில் அந்த இடத்தை நேரடியாகப் பார்வையிட அங்கு சென்றிருந்தார். இதிலிருந்து தான் மறுதரப்பு பிரச்சனைகளை ஆரம்பித்தது. சிங்கள இனவாதியாக தம்மை அடையாளப்படுத்தி வரும் கடற்படை முன்னாள் அதிகாரியான சரத் வீரசேகர எம்.பி. (கோதபாய நிர்வாகத்தில் அமைச்சராக இருந்தவர்) நீதிபதிக்கு தமது பக்கக் கருத்துகளை எடுத்துரைக்க முயன்றார்.

அதற்கு நீதிபதி இடமளிக்கவில்லை. நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டதா என்பதை பார்வையிடவே அந்த இடத்துக்கு தாம் வந்ததாக தெரிவித்த நீதிபதி, விசாரணை நடத்துவதற்காக அல்லவென்று பவ்வியமாக எடுத்துக் கூறிய போதிலும், தம்மை சிங்கள மக்களின் பிரதிநிதி என்ற தோரணையில் சரத் வீரசேகர தொடர்ந்தும் கருத்துக் கூற முனைந்த போது `உங்களுக்கு இடமளித்தால் மற்றையோருக்கும் இடமளிக்க வேண்டி வரும். விசாரணைகள் நீதிமன்றத்தில் மட்டுமே இடம் பெற வேண்டும்` என்று தமது முடிவைத் தெரிவித்த நீதிபதி சரவணராஜா அங்கிருந்து போய்விட்டார்.




இதன் பின்னரே விவகாரம் இனவாதமாக மாற்றப்பட்டது. நீதிபதியின் விசாரணைத் தீர்ப்பைக் கண்டித்த சரத் வீரசேகர மோசமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி நீதிபதிக்கு எச்சரிக்கைப் பாணியில் அச்சத்தை ஏற்படுத்தினார். மற்றொரு எம்.பி.யான உதய கம்மன்பில தமது பங்குக்கு இனவாதத்தைக் கக்கினார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி சரத் வீரசேகர நீதிபதிக்கு அச்சமூட்டும் வகையில் உரையாற்றியதை சபாநாயகர், பிரதமர், நீதியமைச்சர் எவருமே தடுக்கவில்லை. அவரின் உரைகளை நாடாளுமன்ற பதிவேடான ஹன்சாட்டில் நீக்குமாறும் உத்தரவிடவில்லை.

நீதிபதி சரவணராஜா கடந்த மாதம் 23ம் திகதியிட்ட தமது பதவி விலகல் கடிதத்தை நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவிட்டு, பாதுகாப்புக் காரணமாக நாட்டை விட்டுச் சென்று விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் சட்டமா அதிபரை (அட்டர்னி ஜெனரல்) தாம் சந்தித்தது பற்றி நீதிபதி குறிப்பிடவில்லையாயினும் அதனை வெளிப்படையாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலும், அதற்கான காரணங்களும், அதற்கு முன்னும் பின்னுமான செயற்பாடுகளும் முக்கிய அவதானத்துக்குரியவை.

குருந்தூர்மலைப் பிரதேசத்தில் பௌத்த விகாரை அமைப்பது தொடர்பாக நீதிமன்றம் விடுத்த உத்தரவு மீறப்பட்டுள்ளது. சட்டம் மட்டுமன்றி நீதியும் இங்கு உதாசீனம் செய்யப்பட்டுள்ளது. (தமிழரான நீதிபதியின் தீர்ப்பை ஏற்க வேண்டியதில்லை என்ற சிங்கள பௌத்த மேலாண்மை இங்கு முன்னிலை பெற்றுள்ளது.)

ஜனநாயக ரீதியான ஒரு நாட்டுக்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றும் நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினரான சரத் வீரசேகர தம்மை இன்னமும் படை வீரராகவே காட்சிப்படுத்தி சிங்கள பௌத்த தலைவர் போன்று நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதிபதிக்கு உயிர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பதவி விலகுவதற்கு முன்னர் சட்டமா அதிபரை செப்டம்பர் 21ம் திகதி தாம் சந்தித்த போது குருந்தூர்மலை வழக்கின் கட்டளைகளை மாற்றியமைக்குமாறு அவர் தம்மிடம் அழுத்தம் பிரயோகித்ததாக நீதிபதி சரவணராஜா தெரிவித்துள்ளார். (இந்தக் கூற்று உண்மையானதாயின் இது மிகப் பாரதூரமான ஒரு செயற்பாடு.)

சட்டமா அதிபர் என்னும் பதவி நீதி முறைச் சார்புடைய, அரசியல் சார்பற்ற (Quasi Judicial and non political position) பதவியாகும். நாட்டு நிர்வாகத்தின் பிரதம சட்ட அதிகாரி (Chief Legal Officer) இவரே. வழமையாக உயர்ந்த மதிப்புக்குரிய வழக்கறிஞர் ஒருவர் - அதிலும் முக்கியமாக சொலிசிற்றர் ஜெனரலாக இருப்பவரே இப்பதவிக்கு நியமிக்கப்படுவதுவுண்டு. இப்பதவி வகித்த சிலர் பின்னர் நீதியரசர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு இப்பதவிக்கான தகுதி, தராதரங்கள் என்பவற்றுக்கு மாறாக நீதிமன்றம் ஒன்று வழங்கும் தீர்ப்பினை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளில் சட்டமா அதிபர்கள் ஈடுபடுவதில்லை - ஈடுபடவும் கூடாது.

தற்போதைய சட்டமா அதிபர் இப்பதவியை பெற்ற 48வது அதிகாரி. இவருக்கு முன்னர் செ.நாகலிங்கம் (அடங்காத் தமிழர் முன்னணித் தலைவர் சி.சுந்தரலிங்கத்தின் மூத்த சகோதரர்), சிவாபசுபதி, க. கமலசபேசன் ஆகிய தமிழர்கள் சட்டமா அதிபர்களாக பதவி வகித்துள்ளனர். 1975 தொடக்கம் 1988 வரை சட்டமா அதிபராக இருந்த சிவா பசுபதி அவர்களே ஆகக்கூடிய காலம் இப்பதவியை வகித்த ஒருவர்.

தற்போதைய சட்டமா அதிபர் சாதாரணமான ஒருவரல்ல. இவரது தந்தையார் சிவகுமார் ராஜரட்ணம் புகழ் பெற்ற அட்வகேட். கொழும்பு வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தவர். பாட்டனார் துரையப்பா ராஜரட்ணம் முடிக்குரிய புறொக்டராக கடமையாற்றியவர். பின்னர் திருகோணமலையின் முதலாவது பட்டினசபையின் தலைவராகவும் இருந்தவர்.

இந்தக் குடும்ப பின்னணியில் வந்த சஞ்ஜேய் ராஜரட்ணம் பதில் சொலிசிற்றராக இருந்த போது 2021 மே மாதம் ஜனாதிபதி கோதபாயவினால் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டவர்.

நீதிமன்றத் தீர்ப்பு தூக்கி வீசப்பட்டது. நீதி மறுக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு பேணப்படவில்லை என்பவற்றுக்கும் மேலாக நீதிமன்ற கட்டளையை மாற்றியமைக்குமாறு அத் தீர்ப்பை வழங்கிய நீதிபதியிடம் சட்டமா அதிபர் கோரினார் என்பதே இன்றைய பேசுபொருள். இது தொடர்பாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், நீதிபதி சரவணராஜா தாமாகவே சென்று சட்டமா அதிபரைச் சந்தித்தாரென்று தெரிவித்துள்ளார்.

அவர் அழைத்துப் போனாரா, இவர் தாமாகப் போனாரா என்பதல்ல இன்றைய கேள்வி. முன்னைய நீதிமன்ற கட்டளைகளை மாற்றியமைக்குமாறு நீதிபதியிடம் சட்டமா அதிபர் கோரினாரா என்பதுவே முனைப்புப் பெற்றுள்ள கேள்வி.

நீதிபதி சரவணராஜா தமது வாகனத்தை கொழும்பில் விற்பனை செய்துள்ளாரென்றும், இரண்டு வெளிநாட்டு ராஜதந்திரிகளை அவர் சந்தித்தாரென்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ள விடயங்கள் இங்கு சம்பந்தப்படாதவை.

23ம் திகதி தமது பதவி விலகலை எழுத்து மூலம் அறிவித்த பின்னர் நீதிபதி சரவணராஜா வாகனத்தை விற்கலாம், தமது வீட்டை விற்கலாம், எவரையும் சந்திக்கலாம். அவரது தனிப்பட்ட நடவடிக்கைகள் பற்றி நீதியமைச்சர் கவலை கொள்ளத் தேவையில்லை. வெளிநாடொன்றில் நீதிபதி அகதித் தஞ்சம் பெற முயன்றார் என்ற கருத்தை விதைத்து மற்றைய விடயங்களை மூடி மறைக்க விஜேதாச ராஜபக்ச முனைகின்றார்.

நீதிமன்ற கட்டளையை மாற்றியமைக்குமாறு சட்டமா அதிபர் நீதிபதியிடம் கோரினாரா இல்லையா என்பதற்கான உண்மையான பதில் வெளிவர வேண்டும். சட்டமே சவக்கிடங்குக்குள் போயுள்ள நிலையில், நீதியின் விலை என்ன என்பது சந்திக்கு வந்துள்ளது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

30 செப்டம்பர் 2023 முதல்06 ஒக்டோபர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி கார்த்திகேசு அன்னலட்சுமி

வேலனை மேற்கு 7ம் வட்டாரம் சிற்பனை முருகமூர்த்தி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கார்த்திகேசு அன்னலட்சுமி அவர்களது 31ம்நாள் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 02 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கார்த்திகேசு அன்னலட்சுமி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினசிங்கம் மதியழகன்

புங்குடுதீவு 7ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 09 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள்.. திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மநாதன் கனகராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களின் ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 05 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மநாதன் கனகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 45ம்நாள் நினைவஞ்சலி



### திரு ஆனந் ரகுபதி

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த. திரு ஆனந் ரகுபதி அவர்களது 45வது நாள் நினைவு நாள் 24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரங்கள், உறவுகள் இணைந்து அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை ஆகிய மூன்று இல்லங்களுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆனந் ரகுபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார்

இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவாகவும் மஹாலய உபயமாகவும் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 30 செப்டம்பர் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருபாமலர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது,23வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு செல்லர் மார்க்கண்டு

### திருமதி மனோன்மணி மார்க்கண்டு



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2023 புதன்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடுபத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



30 செப்டம்பர் 2023 சனிக்கிழமை இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் மஹாலய விரத உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோகாந்தன் சாருமதி இணையர்களின் செல்வப்புதல்வி சுபீக்கா மனோகாந்தனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சுபீக்கா தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



02 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை வேலணை மேற்கு 7ம் வட்டாரம் சிற்பனை முருகமூர்த்தி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கார்த்திகேசு அன்னலட்சுமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி மதன் துஷாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி உருத்திரசாயி மதனின் மூன்றாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி உருத்திரசாயி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு அதி சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.



05 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பெருமாள்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வத்சலா கண்ணன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி வத்சலா கண்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை சாவகச்சேரி - நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி ஜெயகாந்தன் நித்தியகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கௌத்தன் ஜெயகாந்தனின் 25வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கௌத்தன்தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 3வது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி உருத்திரசாயி மதன்

05 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி மதன் துஷாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி உருத்திரசாயி மதனின் மூன்றாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் தனது இல்லத்தில் மிக சிறப்பாக பிறந்த நன்நாளைக் கொண்டாடிய செல்வி உருத்திரசாயி மதன் அன்றையதினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர் பானங்களும் வழங்கி மகிழ்ந்தார். அகவை மூன்று காணும் செல்வி உருத்திரசாயி பார் போற்றும் பைந்தமிழ் மகளாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும் அவரது உறவுகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!



AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல்
2% வட்டி
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

நந்தா
NANTHA CATERS
Sri Lankan & Indian Food
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421

N.K.S
DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd, Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229


வெள்ளி விழா கண்ட
அரவிந்தனின்
மெகா ரியூனேர்ஸ்
இசையில்

Mega Tuners

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை

12வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்

பிரபல பின்னணிப் பாடகி
**சுர்முகி**

பிரபல பின்னணிப் பாடகர்
**முகேஷ்**

OCTOBER 28 2023
SAT@ 6:00PM

ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE
TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)

கனேடிய தமிழ்ப்பாடகர்கள்
இணைந்து வழங்கும்

# இன்னிசை மாலை

அன்பளிப்பு
**$200.00 • $100.00 • $50.00**
விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்

தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் - 416.841.9600
தயவு செய்து நுழைவுச்சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும்.
நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.
தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்

**சிறப்பு உணவு:** ரொறன்ரோவின் முன்னணி உணவகமான **நந்தா கேற்றறிங்** வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

JESEETHA JEGANATHAN
Century 21
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!

GODAVARI
Truly South Indian
416-431-5577
416-901-5578
795 Markham Rd, Scarborough, ON M1H 2Y2
godavarica.com
godavaritoronto@gmail.com


அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
**லோகன் இராசையா**
**416 991 1292**
**Can West Transport**


KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3, SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
**சாந்தா பஞ்சலிங்கம்**
**416 200 5470**
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)


HAYHER & VASAN
LITIGATION LAWYERS
CAOUTHAM VASAN
208-885 PROGRESS AVE SCARBOROUGH, ON
207-32 VILLAGE CENTRE PLACE MISSISSAUGA, ON
• Personal Injury
• Real Estate
• Wills and Estates
• Immigration
vasan@hvlaw.ca
905-461-1515

வசந்தம் சுப்பர்மார்க்கெட்
2900 Markham Road, Scarborough, ON MIX 0C8
416 292 8585

U Star Art
All In One Place
Get an Exclusive Offer With an Exciting Package!
Our Services
PRIYA UTHAYAN
(416) 897-5816
647-945-7212

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

TIMES IRON WORKS INC.
Times Metals Sales

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

Century 21
Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

STANDARD MORTGAGES INC.
Tel: (416) 298-1700
Fax: (416) 754-8651
Cell: (416) 993-2638
Toll Free: 1-866 765 9427
Toll Free Fax: 1-866 765 9375
raj@smi4loan.com
www.standardmortgagesinc.com
RAJ SUBRAYAM

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
Foresters

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் கனடாவின்

கலை மரபுரிமை உபகுழு பெருமையுடன் வழங்கும்

# கலையரசி 2023



ஞாயிற்றுக்கிழமை, ஒக்ரோபர் 8, 2023

மாலை 5:31

Flato Markham Theatre
171 Town Centre Blvd,
Markham, ON L3R 8G5



- தமிழ் மரபிசை
- விழித்திடு – நாடக அளிக்கை
- கலையரசி மலர் வெளியீடு
- ஷிபோதனின் "எங்கேயும் எப்போதும் சங்கீதம் சந்தோஷம்"
- நடன நிகழ்வுகள்
- சிறப்புச் சொற்பொழிவு

என்று மூன்று தமிழும் ஓரிடம் சேரும் மாபெரும் கலையிரவு

**எங்கள் கலை எனுஞ் சுடர் கொண்டே
எவ்விருட்டாயினும் நாம் கடப்போம்**

## தொடர்புகள்:

| | |
|---|---|
| சேயோன் - 416 602 4530 | குகதாசன் - 416 558 5939 |
| ரவீந்திரா - 416 230 0360 | மதியழகன் - 416 277 1067 |

எமது பண்பாடுகளையும் விழுமியங்களையும் காப்போம்

# நீதிபதிக்கே கிடைக்காத நீதி?

இலங்கை நாடாளுமன்றம் கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான வெறுப்பு பேச்சுக்களை அச்சமின்றிக் கூறும் ஓரிடமாகக் காணப்படுகின்றது. நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்ட மற்றும் நீக்கப்படாத வெறுப்புப் பேச்சுக்களைத்தொகுத்தாலே போதும். இனப்பிரச்சினையின் ஊற்றுக்களை இனப்படுகொலையின் ஊற்றுக்களைத் தெளிவாகக் காணலாம்.சரத் வீரசேகர ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினராக முல்லைத்தீவு நீதிபதியை அவமதிக்கவில்லை. அவர் ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலைத் தான் பிரதிபலித்தார். ஒரு நாடாளுமன்றத்தின் அபகீர்த்தி மிக்க ஒரு பாரம்பரியத்தின் ஆகப்பிந்திய வாரிசு அவர்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன தனக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனின் வீட்டை கற்களால் தாக்குமாறு தனது ஆதரவாளர்களை ஏவியதாக குற்றம் சாட்டப்படுகிறது. எந்தப் பிரதம நீதியரசரின் முன் அவர் பதவியேற்றாரோ. அதே பிரதம நீதியரசரின் வீட்டைத் தாக்குமாறு குண்டர்களை ஏவி விட்டார்.

ராஜபக்சக்கள் இலங்கைத் தீவின் முதற் பெண் பிரதம நீதியரசரான சிராணி பண்டாரநாயக்காவை நாடாளுமன்றத்தின் மூலம் பதவி நீக்கினார்கள். தங்கள் சொந்த இனத்தைச் சேர்ந்த பிரதம நீதியரசர்களையே அவமதிக்கும் ஓர் அரசியல் பாரம்பரியத்தில், ஒரு மாவட்ட நீதிபதிக்கு இவ்வாறு நடந்தமை புதுமையானது அல்ல.

அது மட்டுமல்ல இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மேலும் ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. சட்டம், நீதி பரிபாலனக் கட்டமைப்பு போன்றவை சுயாதீனமானவை என்று கூறப்படுவது ஒரு தோற்ற மாயைதான். ஜனநாயக இதயம் செழிப்பாக இருக்கும் ஒரு நாட்டில் நீதிபரிபாலனத் துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையே வலு வேறாக்கம் இருக்கக்கூடும். ஆனால் ஜனநாயகத்துக்குப் பதிலாக இனநாயகம் பயிலப்படும் ஒரு நாட்டில், இன நாயகத்தின் பாதுகாப்பிடமாகக் காணப்படும் ஒரு நாடாளுமன்றம் இனரீதியாக பாரபட்சமுள்ள சட்டங்களைத் தான் நிறைவேற்றும். அதாவது ஓர் அரசுக் கட்டமைப்பின் அரசுக் கொள்கை எதுவோ அதைத் தான் அவர்கள் சட்டமாக நிறைவேற்றுவார்கள். அந்த சட்டத்தைத் தான் நீதி பரிபாலனக் கட்டமைப்பு அமுல்படுத்தும். அதாவது சட்டமும் நீதிபரிபாலனக் கட்டமைப்பும் அரசின் உபகரணங்கள் தான். இதில் சில தனிப்பட்ட நீதிபதிகள் அந்த சிஸ்டத்தின் கைதிகளாக இருக்க மறுக்கும் பொழுது நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வரும்.




சட்டம் என்பது அதிகாரத்தின் சேவகன் தான். அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது ஆட்சிக் கொள்கையை அமுல்படுத்த சட்டங்களை இயற்றுவார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம். இப்பொழுது விவாதிக்கப்படும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் போன்ற எல்லாமே ஒடுக்கும் அரசுக் கட்டமைப்பின் உபகரணங்களே. இவை மட்டுமல்ல பெருந்தொற்று நோய்க் காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டமானது தமிழ் மக்களின் நினைவு கூரும் உரிமைக்கு எதிராகப் பயன் படுத்தப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இது தொடர்பில் அதிகம் பகிரப்படும் ஓர் ஆங்கிலக் கூற்று உண்டு. தென்னாபிரிக்காவின் இனஒதுக்கல் சட்டபூர்வமாகத்தான் செய்யப்பட்டது. ஹிட்லர் யூதர்களை இனப்படுகொலை புரிந்தமை சட்டபூ ர்வமாகத் தான் செய்யப்பட்டது. அடிமை முறைமை சட்டபூர்வமானது. கொலோனியலிசம் அதாவது குடியேற்றவாதம் சட்டபூர்வமானது. எது சட்டபூர்வமானது என்பது நீதியின் பாற்பட்ட ஒரு விவகாரம் அல்ல. அது அதிகாரத்தின் பாற்பட்ட ஒரு விவகாரமே

இலங்கைத்தீவில் நாடாளுமன்றம் இனரீதியிலான அதிகாரத்தைப் பிரதிபலிக்கும் போது இங்கு சட்டமும் அந்த அதிகாரத்தின் சேவகனாகவே காணப்படும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்துத் தான் முல்லைத்தீவு நீதிபதியின் விவகாரத்தைப் பார்க்க வேண்டும்.

இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதியெனப் படுவது ஏற்கனவே கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு விட்டது. 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐநாவின் நிலைமாறுகால நீதிக்கான அல்லது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம் எனப்படுவது உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை கேள்விக்கு உள்ளாக்குகின்றது. உள்நாட்டு நீதி போதுமாக இருந்தால் எதற்காக நிலைமாறு கால நீதி என்ற அனைத்துலக ஏற்பாட்டைக் குறித்துச் சிந்திக்க வேண்டி வந்தது?

மேலும் அண்மையில் வெளியிடப்பட்ட சனல் நாலு வீடியோவும் உள்நாட்டு நீதி தொடர்பாக ஏற்கனவே உள்ள சந்தேகங்களைப் பலப்படுத்துகின்றது. கடந்த ஆண்டு ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 56ஃ1 தீர்மானத்தின் அடிப்படையில் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரித்துத் தொகுப்பதற்கான ஒரு கட்டமைப்பு ஐநா மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. இதில் சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒரு நாள் இலங்கைக்கு எதிராக பயன்படுத்தப்படத்தக்கவை. அவை நிச்சயமாக இலங்கைத் தீவின் உள்நாட்டு நீதிபரிபாலனக் கட்டமைப்பிடம் வழங்கப்படப் போகும் தகவல்கள் அல்ல. இலங்கைத்தீவின் உள்நாட்டுப் புலனாய்வுக் கட்டமைப்பு மற்றும் நீதி பரிபாலன கட்டமைப்பு என்பவற்றின் மீதான நம்பகத்தன்மையை அந்த அலுவலகம் கேள்விக்கு உள்ளாக்குகின்றது.

இவ்வாறான அனைத்துலகச் சூழலில் தான் முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் நடந்திருக்கிறது. இது பொறுப்புக் கூறல் தொடர்பில் இலங்கைத் தீவின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மேலும் பலப்படுத்தக்கூடியது. தமிழ் மக்கள் ஏன் அனைத்துலக விசாரணையைக் கேட்கின்றார்கள் என்பதனை நிரூபிப்பதற்கு ஆகப்பிந்திய சான்று இது.

தென்னிலங்கையில் உள்ள பேராயர் மல்கம் ரஞ்சித், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அனைத்துலக விசாரணை குறித்த தமது கோரிக்கைகளிலிருந்து பின்வாங்கும் ஓர் அரசியல் சூழலில், இந்த விவகாரம் தமிழ் நோக்கு நிலையில் பொருத்தமாகக் கையாளப் பட வேண்டிய ஒன்று. பேராயர் மல்கம் ரஞ்சித், மைத்திரிபால சிறிசேனா போன்றவர்கள் தொடக்கத்தில் அனைத்துலக விசாரணை தேவை என்று கேட்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய கோரிக்கை தளம்பத் தொடங்கி விட்டது. சிங்கள பௌத்த கூட்டு உளவியலைப் பாதுகாப்பதற்காக அவர்கள் தளம்பத் தொடங்கி விட்டார்கள். எந்த ஒரு கூட்டு உளவியலின் பிரதிநிதியாக சரத் வீரசேகர பேசுகிறாரோ, அதே கூட்டு உளவியலின் வெவ்வேறு முகங்கள் தான் பேராயரும் முன்னாள் ஜனாதிபதியும்.

எனவே அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கையை தமிழ் மக்கள் பெரும்பாலும் தனியாகத்தான் முன்னெடுக்க வேண்டியிருக்கும். ஆனால் அதைக் கூட ஒரு கட்சியாக முன்னெடுப்பதற்குப் பதிலாக பல கட்சிகளாக முன்னெடுப்பதே பலம்.



கடந்த கிழமை திலீபன், இந்தக் கிழமை ஒரு நீதிபதி என்றவாறாக தமிழ் மக்களின் கவனமும் ஊடகங்களின் கவனமும் புதிய புதிய விடயங்களின் மீது குவிக்கப்பட்டு

கடந்த வாரம் திலீபன். இந்த வாரம் ஒரு நீதிபதி. முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிரான சரத் வீரசேகரவின் கருத்துக்கள் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. அவை ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினரின் கூற்றுகள் என்றும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அவை ஒரு கூட்டு உளவியலின் வெளிப்பாடுகள். கடந்த பல தசாப்தங்களாக சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் எனப்படுவது வெறுப்பு பேச்சுக்களைக் கக்கும் ஓரிடமாகத் தான் காணப்படுகிறது. இனப்படுகொலை தொடர்பான ஐநாவின் நிபுணத்துவக் கூற்று ஒன்று உண்டு. யூத இனப்படுகொலை எனப்படுவது காஸ் சேம்பர்களில் இருந்து -நச்சு வாயுக் கொலைக்கூடங்களில் இருந்து தொடங்கவில்லை. வெறுப்புப் பேச்சுகளில் இருந்து தான் தொடங்கியது என்று.

கின்றது. ஆனால் அவை வெவ்வேறு விடயங்கள் அல்ல. ஒரே ஒடுக்கும் கட்டமைப்பின் வெவ்வேறு வெளிப்பாடுகளே அவை. அவற்றை அவற்றுக்கேயான ஒட்டுமொத்த வரைபடத்துக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது ஒடுக்குமுறைக்கு ஒரு நீண்ட கால வழி வரைபடமும் மாறாத நிகழ்ச்சி நிரலும் ஒன்றிணைந்த செயல்பாடும் உண்டு.

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



எனவே அதற்கு எதிரான போராட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். தாயகம், புலம்பெயர் சமூகம், தமிழகம் ஆகிய மூன்று தரப்புகளும் ஒன்றிணைந்து அந்தக் கோரிக்கையை உக்கிரமாக முன்வைக்க வேண்டும். அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி செல்வதற்கான வழி வரைபடம் ஒன்று தமிழ் கட்சிகளிடமும் செயற்பாட்டாளர்களிடமும் இருக்க வேண்டும்.

அனைத்துலக விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை ஐநாவுக்கு எழுதும் கடிதங்களில் மட்டும் இருந்தால் போதாது. அல்லது ஐநாவின் பக்க நிகழ்வுகளில் அல்லது ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளில் இருந்தால் மட்டும் போதாது. அல்லது ஊடகங்களுக்கு வழங்கப்படும் நேர்காணல்களில் இருந்தால் மட்டும் போதாது. அல்லது தேர்தல் கால விஞ்ஞாபனங்களில் இருந்தால் மட்டும் போதாது.

அதற்குமப்பால், அதை விட ஆழமான பொருளில், அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அனைத்துலக விசாரணையைக் கோருவது அல்லது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி விவகாரத்தை எடுத்துச் செல்வது போன்றன அறநெறியின் பாற்பட்ட அல்லது நீதிநெறியின் பாற்பட்ட கோரிக்கைகள் அல்ல.

அவை முழுக்க முழுக்க வெளியுறவுச் செயற்பாடுகள். பலம் வாய்ந்த நாடுகள் அப்படி ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஏனென்றால் இந்த பூமியிலே தூய நீதி என்று எதுவும் கிடையாது. அரசியல் நீதி தான் உண்டு. நிலைமாறு கால நீதியோ அல்லது பரிகார நீதியோ எதுவானாலும், அரசியல் நீதி என்பது நாடுகளுக்கு இடையிலான அரசியல் பொருளாதார, படைத்துறை நலன்களின் அடிப்படையில் எடுக்கப்படு வது தான்.


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
26th ANNIVERSARY
தவில் வித்துவான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்துவான் இஞ்சிகுடி திரு. E.M.சுப்பிரமணியன் அவர்கள்
நாதஸ்வர வித்துவான் திரு. T.P.N ராமநாதன் அவர்கள்
இடம் :
TAMIL ISAI KALAMANDRAM
1120, Tapscott Rd, Unit, #3,
Scarborouch ON, M1Y 1E8
காலம் : Oct-09-2023 திங்கள்கிழமை
(Thanksgiving Holiday)
நேரம் : மாலை, 4.00 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
நாதஸ்வர வித்துவான் திரு. G.யுகராஜ் அவர்கள்
நாட்டிய வேதா இந்திய கிளாசிக்கல் டான்ஸ் ஸ்ரீமதி ஜெயா பத்மினி ஆனந் அவர்களின் மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்.
சக்தி சங்கீத அகடமி ஸ்தாபகர் சங்கீத வித்தகி திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் மாணவ மாணவிகள் வழங்கும் இன்னிசை
ஏழிசை மதுரசபா ஸ்தாபகர் வீணை வித்துசி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மாணவிகள் வழங்கும் வீணை இசை.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 26வது வருட விழாவை கொண்டாட இருக்கிறது இவ்வருடம் அக்டோபர் மாதம் 09ஆம் தேதி நடைபெறுகிறது. விழாவை சிறப்பிக்க Toronto நாதஸ்வர தவில் கலைஞர்களும், நாதஸ்வர வித்வான் இஞ்சிகுடி திரு. E.M. சுப்பிரமணியன் அவர்களின் கெஞ்சிற கச்சேரி வயலின், மிருதங்கம் கடம், மோர்சிங் பக்கவாத்தியத்துடன் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. அத்துடன் இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார்கள். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் நாதஸ்வர வித்வான் திருமஞ்ஞானம் T.P.N. ராமநாதன் அவர்களும் நாதஸ்வர வித்துவான் G. யுகராஜ் அவர்களும் வருகை தந்து விழாவை சிறப்பிக்க உள்ளார்கள். அத்துடன் Toronto ஆலயங்களில் இருக்கும் நாதஸ்வர தவில் வித்வான்களும் மற்றும் Toronto நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அத்துடன் வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களின் பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com

# ஒரே மாதிரியான அரசியல் அணுகுமுறைகளால் என்ன பயன்?

தேசிய அரசியல் போக்கில் எவ்வித மாற்றங்களும் இல்லை. கடந்த 14 ஆண்டுகளாக ஒரே மாதிரியான அணுமுறைகளிலேயே அரசியல் நகர்கின்றது. இந்தக் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட அணுகுமுறைகள் எவையுமே வெற்றியளிக்கவில்லை. ஒரு விடயத்தை கையாளுவதில் பயனில்லை என்றால் அதனை கைவிட வேண்டும். பதிலாக புதிய அணுகுமுறைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும் அல்லது வாய்புக்கள் கிடைக்கும் வரையில் இருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால் தமிழ் சூழலில் அவ்வாறான அணுகுமுறைகளை காண முடியவில்லை. ஆங்காங்கே அவ்வப்போது சிலர் கூடி எதர்ப்புக்களை வெளியிடுகின்றனர். இவ்வாறான எர்ப்புக்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்க முடியுமா? ஆனாலும் அவ்வாறான எதிர்ப்புக்களால் கூட, எதிர்பார்க்கும் விடயங்களை சாதிக்க முடிந்ததா என்றால், அதுவும் இல்லை.

உதாரணமாக, விகாரைகள் கட்டப்படுவதற்கு எதிர்ப்பை காண்பித்து, அவ்வப்போது அடையாள எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்றன. ஆனால் அந்த எதிர்ப்புக்களால் விகாரைகள் கட்டப்படுவதை தடுக்க முடிந்ததா? இல்லையே! அவ்வாறாயின் இவ்வாறான எதிர்ப்புக்களை காண்பிப்பதன் பயன் என்ன? சர்வதேசத்தை நோக்கி எத்தனையோ கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தனைக்குப் பின்னரும், மேற்குலக இராஜதந்திரிகளோ உள் நாட்டுக்குள் தீர்வை காணுங்கள் என்றே கூறுகின்றனர். ஒரு கட்டத்திற்கு மேல் இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதை எவருமே விரும்பவில்லை.

ஏனெனில் அவ்வாறான அழுத்தங்களால் அவர்களது நலன்கள் பாதிக்கப்படும். தமிழர்களுக்காக அவர்கள் எதற்காக, அவர்களது நலன்களை விட்டுக் கொடுக்க வேண்டும்? முன் வைக்கப்படும் கோரிக்கைகள் ஏன் வெற்றியளிக்கவில்லை, என்பதற்கான பதிலை கண்டு கொள்வது, இலகுவானது. இதன் பின்னரும் முன்னரைப் போன்று அவர்களை நோக்கி கோரிக்கைகளை முன்வைப்பதில் என்ன பயன்?

தீர்வின் எல்லையாக, 13வது திருத்தச் சட்டத்தை இந்தியா குறிப்பிடு ின்றது. இது நமக்கு உடன்பாடானதா அல்லது இல்லையா என்பதற்கப்பால், இந்த யதார்த்ததை நம்மால் கடந்து செல்ல முடியுமா? பதில் இல்லை. அவ்வாறாயின் என்ன தான் செய்வது?

ஏன் இந்த நிலைமை? நமது நிலை தொடர்பில் விவாதிக்கின்ற போது,

பின்னால் கைகாட்டிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இன்று தமிழ் மக்களின் நிலை இது தான். வாய்ப்புக்கள் எங்களின் கதவுகளை தட்டிய போதெல்லாம் அதனை நாங்கள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் இப்போது வாய்புக்களை தருமாறு பலரது கதவுகளை தட்டிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அவர்களோ இப்போது நமக்காக கதவை திறக்கக் கூடிய நிலையில் இல்லை.



இந்தக் கேள்வி தவிர்க்கவே முடியாத ஒன்று. இந்தக் கேள்விக்கான பதிலை காண்பதற்கு நமது கடந்த கால அரசியல் வரலாற்றுக்குள் செல்ல வேண்டும். ஈரோஸ் இயக்கத்தின் தலைவராக இருந்தவரும் பிற்காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்போடு கரைந்து போன வருமான க.வே.பாலகுமாரன், அந்தக்

புதுவை இரத்தினதுரையின் கவிதை வரியொன்றுண்டு. காலத்தை தவற விட்டால் கண்டவனெல்லாம் கதவை தட்டுவான். உண்மையில் இப்போது எங்களுடைய கதவில், எந்தக் கண்டவனும் தட்டவில்லை, நாங்கள் தான் கைவலிக்கத் கண்ட கதவுகளிலெல்லாம் தட்டிக் கொண்டிருக்கின்றோம்.

தீவிரப்படுத்தும் உக்தி அடிப்படையில் விடுதலைப் புலிகளின் அணுகுமுறை. அது யுத்தச் சூழலில், யுத்தத்திற்காகவே கைக்கொள்ளப்பட்ட உக்தி. மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வந்தால், சர்வதேச பொறியிலிருந்து தப்பலாமென்பதற்காகவே, புலிகள் மகிந்தவின் வெற்றியை விரும்பினர். ஆனால் அதிலும் புலிகளுக்கு தோல்வியே ஏற்பட்டது. புலிகளின் நகர்வால், புலிகள் மீதே அனைவரது கோபமும் திரும்பியது. இது பற்றி எனது முன்னைய கட்டுரைகளில் சுட்டிக ˙காட்டியிருப்பதால்,கூறியது கூறலை தவிர்க்கின்றேன்.

எனவே யுத்தத்திற்கான உக்தியை, ஜனநாயக அரசியலுக்கு பிரயோகிக்க முற்படுவது அடிப்படையிலேயே தவறானது. நினைவு கூர்தல்களை முன்னெடுக்க

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



விரும்புவோர் அதற்குரிய இடங்களில் அதனை செய்வதே சரியானது. அதனை ஒரு அரசியல் செயற்பாடாக முன்னெடுப்பதால் எந்தவொரு பயனும் ஏற்படப் போவதில்லை. அடுத்த சந்ததிக்கு விடயங்களை கடத்துகின்றோம் என்றும் சிலர் கூறலாம். ) கடத்தி எதனை சாதிக்கப் போகின்றீர்கள்? குறிப்பிட்ட சூழ்நிலை தான் போராளிகளையும், எதிர்ப்பு அரசிய

காலத்தில் விடுதலைப்புலிகள் பத்திரிகையில் தொடர்சியாக கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தார். அதில் ஒரு கட்டுரையில் அமெரிக்க சிந்தனையாளர் ஜோர்ஜ் சத்நயணாவின் வரலாறு தொடர்பான கூற்றுறொன்றை பயன்படுத்தியிருந்தார். வரலாற்றின் தவறுகளை மறப்

இந்த இடத்திலிருந்து தான் நமது தோல்விகளை மதிப்பிட வேண்டும். வெற்றியை பெறுவதற்காக செயற்படுது ஒன்று.

அடுத்தது, வெற்றியை பெற முடியாமைக்கான காரணத்தை புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு செயற்படுவது இன்னொன்று. இப்போது நாங்கள் இரண்டாவது கட்டத்தில்தான் இருக்கின்றோம். நாங்கள் வெற்றியை நோக்கிச் செயற்பட எத்தணிப்பது எப்போதுமே எங்களிடம் இருப்பதையும் இல்லாமலாக்கும். சனத் தொகையை படிப்படியாக வெளியேற்றும்.

ஏனெனில் வெற்றியை இலக்கு வைத்து செயற்படக் கூடியதொரு அரசியல் சூழலில், நாம் இப்போதில்லை. இனி நாம் வெற்றி பற்றி சிந்திக்கவே கூடாது. இருப்பதை பாதுகாப்பது எப்படியென்று மட்டுமே சிந்திக்க வேண்டும். அதற்கேற்ப எமது செயல்களை திட்டமிட வேண்டும். பெரும் பாண்மை இனத்தோடு முட்டி மோதும் செயற்பாடுகளை விடுத்து முரண்பாடுகளை தீவிரப்படுத்தாமல் இருப்பது தான் புத்திசாதுர்யமானது. முரண்பாடுகளை தீவிரப்படுத்தும் செயற்பாடுகளை தமிழ் தேசிய அரசியலிருந்து முற்றிலுமாக அகற்ற வேண்டும்

ஏனெனில் இந்த முரண்பாடுகளை

லையும் உருவாக்குகின்றதே தவிர, நினைவுகள் கடத்தப்படுவதால் அல்ல. ஆனால் இன்றைய சூழல் முற்றிலும் வேறானது.

எவ்வாறு வசதியான நாடுகளுக்குள் தஞ்மடையலாமென்றே தமிழ் மத்தியதர வர்க்கம் ஏங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ் புலம்பெயர் சமூகம் ஏற்படுத்தியிருக்கும் பண வாழ்வின் கவர்ச்சி தமிழ் சமூகத்தை மோசமாக பீடித்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் இருக்கும் அதிகாரங்களை கொண்டு உச்சளவில் மக்களை திருப்திப்படுத்துவதே முதன்மையானதாக இருக்க வேண்டும். இல்லா விட்டால் வடக்கு கிழக்கை தாயகமென்று கூறும் நிலையைக் வெறும் எழுத்துக்களின் மட்டுமே காண வேண்டிவரும். திருகோணமலையை சிலர் இப்போதும் தமிழர் தலை நகரமென்று உளறிக் கொண்டிருப்பது போல் எதிர்காலத்தை வரையறுக்க விரும்பினால் நமது கடந்த காலத்தின் அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொண்டதிலிருந்து நமது செயலை திட்டமிட வேண்டும். ஒரே மாதிரியான அரசியல் அணுகுமு றைகளால் எந்தவொரு பயனும் ஏற்படப் போவதில்லை. இதனை உணர்ந்து செயலாற்றக் கூடிய அரசியல் தலைமைகளே தமிழ் மக்களுக்கு இப்போது தேவை.



ஆனாலும் இப்போதும் கோரிக்கைகளுடன் தான் தமிழ் அரசியல்வாதிகள் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கின்றனர். யாருடைய கோரிக்கை சரியானது - யாருடையது தவறு, எற்றவாறான விவாதங்கள் தான் தமிழ் ஊடக பரப்பை அதிகம் ஆக்கிரமித்திருக்கின்றது.

இலங்கைத்தீவில் தீர்மானகரமான தலையீடுகளை செய்யக் கூடியது மூன்று நாடுகள் மட்டுமே! அதில் ஒரு நாடான சீனாவை தமிழர்களால் அணுகவே முடியாது. ஏனைய இரண்டு நாடுகளான இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவை தான், சில விடயங்களை வலியுறுத்துகின்றன. அதிலும் இந்தியா மட்டுமே, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வருவின்றது. அமெரிக்கா மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகச் சூழல் தொடர்பில் வலியுறுத்தினாலும் கூட, உள் நாட்டுக்குள் கண்டடையக் கூடியவாறான தீர்வுகள் தொடர்பிலேயே வலியுறுத்தி வருகின்றது. அந்த உள் நாட்டுக்குள் காணக்கூடிய அந்தத்

போர், அந்தத் தவறுகளை மீளவும் செய்யச் சபிக்கப்பட்டவர்களாவர். இவ்வாறு தான் அந்தக் கூற்றை பாலகுமாரன் மொழி பெயர்த்திருந்தார். சிங்களவர்களது அரசியல் தவறுகளை சுட்டிக் காட்டுவதற்காகவே இந்தக் கூற்றை பாலகுமாரன் பயன்படுத்தியிருந்தார்.

அந்தக் கூற்று சிங்களவர்களுக்கு பொருந்துகின்றதோ இல்லையோ ஆனால் நமக்கு மிகவும் கச்சிதமாக பொருந்துகின்றது. அன்று பாலகுமாரன் எழுதியதை பலரும் ரசித்து படித்திருக்கலாம் ஆனால் காலமோ, வரலாற்றின் தவறுகளால் சபிக்கப்பட்ட மக்கள் கூட்டமொன்றாக தமிழினத்தையே முட்டுச் சந்தியில் நிறுத்தியிருக்கின்றது. அந்த இடத்திலிருந்து எங்கு செல்வதென்று தெரியாமல் நாம் தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம்.

அண்மையில் பேராசிரியர் சிவகுமாரன் ஒரு நேர்காணலில் குறிப்பிட்டது போன்று பேருந்தை விட்டு விட்டு

(19ம் பக்கத் தொடர்ச்சி) அதிக கவனம் கொள்வாதோடு தனது நலனிலும் கரிசனை கொண்டவராகவே காணப்படுவார். இலங்கைத் தீவின் நலன் என்பது சிங்கள மக்களின் நலனாகவே அன்றி வேறு எந்த இனத்திற்கானதாகவும் அமைய வாய்ப்பில்லை. தற்போது அமெரிக்கா மட்டுமே இலங்கைத்தீவுக்கு இலாபகரமானது என்றில்லை. ஆனால் அமெரிக்க சீன முரண்பாடு மட்டுமல்ல அமெரிக்க இந்திய கசப்புணர்வும் இலங்கைக்கு இலாபகரமானதாகவே உள்ளது. எனவே இலங்கைத் தீவு மீதான அமெரிக்க நலன் அதிகரித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்கால அரசியலுக்கான முதலீடுகளை அதிகம் முதன்மைப்படுத்தும் அமெரிக்கா அதற்கான நகர்வுகளை செயல்படுத்த ஆரம்பித்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவுகளை முதன்மைப்படுத்தியது போல் இலங்கையின் பொருளாதார நெருக்கடியை மீட்பவராக ரணில்விக்கிரமசிங்காவை அடையாளப்படுத்துவதிலும் புதிய ஊழல் சட்ட த்தை அமுலாக்குவதிலும் அமெரிக்க கவனம் அதிகரித்துள்ளது. அதன் எதிரொலிப்பாகவே இந்திய - சீனக் கூட்டணியை கைவிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுடனான கூட்டணியை பலப்படுத்தி வருகிறார். ஆனால் இறுதியில் சீன-இலங்கைக் கூட்டணியே பலமானதாக அமையும் புவிசார் அரசியலை இலங்கைத் தீவு தனக்குள் கொண்டுள்ளது என்பதை உணர வேண்டிய நிலை ஏற்படவுள்ளது.

# வலிந்து மூக்கை நுழைத்த அலி சப்ரி

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



கனடா பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறி வருகிறது என நியூயோர்க்கில் இருந்து கொண்டு இந்திய ஊடகமான ஏ.என்.ஐக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளியிட்ட கருத்து சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

காலிஸ்தான் புலிப்படை என்ற சீக்கிய அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கனடாவில் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில், இந்திய அரசாங்கம் இருப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதை அடுத்து, இரண்டுநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் பாதிப்படைந்துள்ளன.

இரண்டு நாடுகளும் ஏட்டிக்குப் போட்டியாக, இராஜதந்திர எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

கனேடிய மண்ணில் நிகழ்த்தப்பட்ட இந்தக் கொலையின் மூலம் தங்களின் இறைமை மற்றும் தங்களின் குடிமக்களின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்று ட்ரூடோ கூறியிருந்தார்.

இந்தியாவோ இந்தக் கொலைக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று கூறி வருகிறது. இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் தோன்றியிருக்கின்ற இந்த ப்பூசல், சர்வதேச அரங்கில் கடுமையான கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

ஏனென்றால், அமெரிக்கா தலைமையிலான மேற்குலக கூட்டணியில் கனடா மிக முக்கியமான நாடு. அதேவேளை, இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கா தனது நம்பகமான கூட்டாளியாக இந்தியாவை கருதுகிறது.

இவ்வாறு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்துக்கு மிகவும் வேண்டப்பட்ட முக்கியமான இரண்டு நாடுகள் தங்களுக்குள் மோதிக் கொள்வது அவற்றுக்கு கவலைகளையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இந்த விவகாரத்தில் எந்தவொரு தரப்பையும் கடிந்து கொள்ளவோ, சார்பு நிலைப்பாட்டை எடுக்கவோ இல்லை. கனடாவுக்கு சாதகமாக நடந்து கொண்டால், இந்தியா கோபிக்கும், இந்தியாவுக்கு சாதகமாக கருத்து வெளியிட்டால் கனடா முரண்டு பிடிக்கும்.

எனவே எந்தவொரு தரப்பையும் சாராமல், காய்களை நகர்த்துவது தான் புத்திசாலித்தனமான அணுகுமுறையாக கருதுகின்றன. வல்லரசுகளே நிதானமான போக்கை வெளியிட, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கனடாவுக்கு எதிராக கருத்தை வெளியிட்டிருப்பதுடன், இந்தியாவின் பக்கம் நிற்பதாகவும் காட்டிக் கொண்டிருக்கிறார்.

இந்தியா எதிர் கனடா இடையிலான இந்த இராஜதந்திர மோதலுக்குள், இலங்கையும் இப்போது வலிந்து இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. கடந்த மே மாதம், முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் இடம் பெற்ற போது, கனேடியப் பிரதமர், ஜஸ்டின் ட்ரூடோ, தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கைக்கு இலங்கை அரசாங்கத்தினால் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியிருந்தார். இந்த விவகாரத்தில் ஏற்கனவே கனடாவுடன் முரண்டு பிடித்த அலி சப்ரி இப்போது இந்தியாவின் பக்கம் சார்ந்து கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

கனேடிய மண்ணில் நடந்த ஒரு கொலையை அந்த நாடு தீவிரமாக எடுத்துக் கொண்டிருக்கிறது.

தமது நாட்டின் இறைமைக்கும், தமது குடிமக்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் போது எந்த நாடும் இவ்வாறான பிரதிபலிப்பையே வெளியிடும்.

இலங்கையில் ஒருவர் கொலை செய்யப்படும் போது அதில் வெளிநாட்டுத் தொடர்புகள் இருந்தால் இலங்கை அரசாங்கம் அதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாது. அதுவும் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பு ஒன்று தொடர்புபட்டி




ருந்தால், ஆபத்தானதாக கருதாமல் விடாது. பொறுப்புக்கூறல் தொடர்பான விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்பதையே எதிர்க்கின்ற இறைமை பறிபோய் விடும் என குரல் எழுப்புகின்றவர்கள், இன்னொரு நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் கொலைகளில் ஈடுபட்டால் சகித்துக் கொள்வார்களா? அதனை அலி சப்ரி புரிந்து கொள்ளவில்லை. இந்தியாவுக்கு அடுத்ததாக, உலகில் அதிகளவில் சீக்கியர்கள் வாழுகின்ற நாடு கனடா. இவ்வாறான நிலையில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையுடன் நின்று போகுமா, இன்னும் கொலைகள் தொடருமா என கவலை கொள்ளக் கூடிய நிலையில் கனடா இருப்பதை மறந்து விட முடியாது.

கனடாவில் தமிழர்கள் சக்தி வாய்ந்த புலம் பெயர் சமூகமாக உருவெடுப்பதை இலங்கை அரசு அச்சத்துடன் நோக்குவது போலவே, கனடாவில் சீக்கிய பிரிவினைவாத அமைப்புகளுக்கு இடமளிக்கப்படுவதையும் இந்தியா விரும்பவில்லை.

அதன் தொடர்ச்சியாக இந்தக் கொலை இடம் பெற்றிருக்கலாம் என்றும் ஒரு கொலையுடன் அது நின்று போகும் என்ற நம்பிக்கை காணப்பட்டால், கனடா சில வேளை அதனை கண்டுகொள்ளாமல் போயிருக்கலாம். ஆனால் அங்கு சீக்கிய சமூகம் வலுவாக காலூன்றியிருப்பதால், அவர்கள் மத்தியில் இவ்வாறான சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறும் சூழல் காணப்பட்டது. அது கனடாவைப் பொறுத்த வரையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் மாத்திரமல்ல, சட்டம் ஒழுங்கையும் கேள்விக்குட்படுத்தவதாக இருக்கும்.

அதனால் இந்தியாவுடன் நேரடியாக முட்டிக் கொள்வதை தவிர, கனடாவுக்கு வேறு வழியிருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் கனடாவுக்கு எதிராகவும் இந்தியாவுக்கு ஆதரவாகவும் நிற்பதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உள்ளன.

388 உறுப்பினர்களைக் கொண்ட கனேடிய பாராளுமன்றத்தில் 18 சீக்கியர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்திய பாராளுமன்றமான லோக்சபாவில் கூட 13 உறுப்பினர்கள் தான் இருக்கின்றனர்.

சுமார் 8 இலட்சத்துக்கும் சற்று குறைவான எண்ணிக்கையைக் கொண்ட சீக்கியர்கள் பேசுகின்ற பஞ்சாபி மொழி, கனடாவில் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளுக்கு அடுத்து மூன்றாவதாக அதிகளவு மக்களால் பேசப்படும் மொழியாக இருக்கிறது.

சீக்கியர்களைப் போலவே இலங்கைத் தமிழர்களும் கனடாவில் வலுவானதொரு புலம்பெயர் சமூகமாக மாறியிருக்கிறது. சுமார் இரண்டரை இலட்சம் தமிழர்கள் கனடாவில் வசிக்கின்ற நிலையில், கனேடிய பாராளுமன்றத்தில் தமிழர்கள் ஒரு ஆசனத்தைக் கொண்டிருக்கிறார்கள். கனேடிய புலம்பெயர் சமூகம் இப்போது ஒன்டாரியோ மாகாண சட்டமன்றத்தில் இணை அமைச்சர் பதவியையும், பாராளுமன்றத்தில் அமைச்சர் பதவி ஒன்றையும் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு வலுவடைந்திருக்கிறது புலம்பெயர் கனேடியர்கள் பெரும்பாலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தவர்கள் என்பதாலும், இன்னமும் அவர்கள் தமிழ்த் தேசிய உணர்வுடன் இருப்பதாலும் இலங்கை அரசாங்கம் அவர்களை அச்சுறுத்தலுக்குரியர்களாகவே பார்க்கிறது.

போர்க்கால மீறல்களுக்கு சர்வதேச நீதி கோரும் செயற்பாடுகளுக்கு கனடாவில் இருந்து தமிழர்கள் அழுத்தம் கொடுப்பதாக, தமக்கு எதிராக செயற்படுவதாக இலங்கை அரசாங்கம் கருதுகிறது. இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான இவ்வாறான செயற்பாடுகளுக்கு கனடா களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பது, கனடாவை பயங்கரவாதிகளின் புகலிடமாக அலி சப்ரி அடையாளப்படுத்துவதற்கு முக்கிய காரணம் ஆகும்.

ஆனால், கனடா, பயங்கரவாத தொடர்புகளுடைய எவரையும், பகிரங்கமாக செயற்பட அனுமதிக்கவில்லை. அவ்வாறு செயற்பட முனைந்தவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்காமல் இருந்ததும் இல்லை. ஆனாலும் கனடா மீதான இலங்கையின் வன்மம் குறையவில்லை.


போர்க்கால மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் கனடா, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அது தொடர்பான தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. கனடாவின் இந்த செயற்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுப்பதாக இருக்கிறது. இது, இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு கனடா தொடர்பாக இருந்து வருகின்ற கடுப்புக்கு இரண்டாவது காரணம்.

அலி சப்ரியைப் பொறுத்த வரையில், இன்னும் அதிகமாகவே கனடா மீது அவருக்குக் காழ்ப்புணர்வு இருக்கலாம். அதற்கு முக்கியமான காரணம் ராஜபக்ஷவினருடன் அவருக்கு உள்ள நெருங்கிய தொடர்பு.

அலி சப்ரி நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு முன்னர், ராஜபக் ஷவினரின் சட்டத்தரணியாகவே இருந்தார். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ராஜபக்ஷவினருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில், முன்னிலையாகி அவர்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் அவர்.

குறிப்பாக, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளை முழுமையாக கையாண்டவர் அலி சப்ரி தான். அதற்கான பிரதி உபகாரமாக கோட்டாபய ராஜபக்ஷவினால் அவர் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு, அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது. அந்த இராஜ விசுவாசம் அவரிடம் இருக்கிறது.

(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இலங்கை ஜனாதிபதியின் நியூயோர்க் உரையும் அமெரிக்க தந்திரோபாயமும்

இலங்கையின் அரசியலில் காணப்படும் போக்கு இந்திய, அமெரிக்க சீனப் போட்டியின் பிரதிபலிப்புகள் அதிகமாக உள்ளது. அதனை கையாளும் விதத்தில் இலங்கை ஜனாதிபதியின் நகர்வுகள் அமைந்துள்ளது. இலங்கையின் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அனைத்தையும் அவதானிக்கும் போது மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்துவதாகவே தெரிகிறது. அதிலும் அமெரிக்காவின் பின்னணியில் ஜனாதிபதி இயங்குவதாகவே தோன்றுகிறது.

அதற்கு அமைவாகவே சர்வதேச நாணய நிதியத்தினது இலங்கை பொறுத்த தீர்மானம் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பின் பிரதிநிதி சமந்தபவர் இலங்கை வருகைக்கான திட்டமிடல், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஜனாதிபதியின் உரை, இந்தோ-பசுபிக் தீவு நாடுகளின் சந்திப்பில் ஆற்றிய உரை என்பனவற்றை கோடிட்டுக் காட்டக் கூடியதாக அமைந்துள்ளது. இக்கட்டுரையும் இந்திய-சீன நட்புறவை விடுத்து அமெரிக்க-இலங்கை உறவின் போக்கில் ஏற்பட்டு வரும் நெருக்கத்தை தேடுவதாக அமையவுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹாவின் செயற்றிட்டங்களுக்கு ஆதரவளிப்பதாக தென்கொரிய ஜனாதிபதி யுன் சுக் ஜியோஸ் ஐ.நா.வின் பொதுச்சபையில் கலந்து கொண்ட இலங்கை ஜனாதிபதியை சந்தித்த போது தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடும் போது பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிப்பதற்கு ஜனாதிபதி ஆற்றும் பணிகளைப் பாராட்டியுள்ளார்.

இலங்கையின் மீட்பு முயற்சிக்கு ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் தொடர்ந்து ஆதரவளிக்கும், தேவையான நிபுணத்துவ உதவிகளையும் வழங்கும் என அதன் பணிப்பாளர் சமந்த பவரை நியுயோர்க்கில் இலங்கை ஜனாதிபதியை சந்தித்த போது தெரிவித்தார். ஜனாதிபதி அவருடன் உரையாடும் போது சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்பை நினைவுபடுத்தியதுடன் ஊழல் ஒழிப்க்கான இலங்கை எதிர்கொள்கின்ற சவால்களையும் விவாதித்தார்.

இந்தியாவுடனோ சீனாவுடனோ இலங்கை கூட்டணி அமைத்துக் கொள்ளாது எனவும் எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி செயல்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தோ-பசுபிக் தீவு நாடுகளின் மூன்றாவது உச்சி மகாநாட்டில் நியுயோர்க்கில் உரையாற்றும் போது நெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றிய போது கோடிட்டுக் காட்டிய ஏனைய விடயங்களை பின்வருமாறு நோக்க முடியும்.

ஒன்று, இந்தோ-பசுபிக் தீவு நாடுகளின் சுதந்திரம் மற்றும் உள்விவகாரங்களில் தலையிடாமை தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

இரண்டு, உலக வல்லரசுகளுக்கிடையிலான போட்டியில் தலையிட தென் பசுபிக் தீவு நாடுகள் விரும்பவில்லை.

மூன்று, இந்நாடுகள் தமது இறைமையையும் சுதந்திரத்தையும் பேண விரும்புகிறார்கள்.

நான்கு, குவாட் மற்றும் சீனாவின் இலக்குடன் தொடர்பில்லாத தீவு நாடுகள் தமது முன்னுரிமையைக் கொண்டுள்ளன. அவற்றை மதிக்கத் தயாராகும் எந்தவொரு தரப்புடனும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப இலங்கை செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

ஐந்து, சீனாவின் எழுச்சியை பல நாடுகள் பிராந்திய மட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் ஆனால், வல்லரசுகளுக்கிடையில் போட்டி நிலவுவதாகவும் அதனால் அதிக கவலை இந்தோ-பசுபிக் தீவு



நாடுகளுக்குள் எழுந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆறு, தென்பசுபிக் மற்றும் இந்து சமுத்திரம் மூலோபாய மதிப்பைக் கொண்டிருப்பதாகவும் தெற்கு பசுபிக் பிராந்தியம் அமெரிக்க கடற்படைக்கு இன்றியமையாத கேந்திர மையமென்றும் குறிப்பிட்டார்.

ஏழு, இந்து-பசுபிக்கின் முக்கியத்துவம் சீனாவின் சவால்களால் எழுந்ததென்றும் இது பிராந்திய ஒத்துழைப்பினை மீள் மதிப்பீடு செய்ய தூண்டியுள்ளதாக தெரிவித்தார்.

எட்டு, அமெரிக்கா மாலைதீவில் தூதரகமொன்றை திறப்பது அண்மைக் கால முன்னேற்றம் என்று குறிப்பிட்டார். மேற்குறித்த விடயங்கள் அனைத்திலும் அமெரிக்க சார்புத்தன்மை மேலோங்கியுள்ளது. அதிலும் இந்தியாவுடனும் சீனாவுடனும் இலங்கை கூட்டணி அமைத்துக் கொள்ளாது என்ற கருத்து ஏன் முதன்மைப்படுத்தப்படுகிறது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அப்படியாயின் அமெரிக்காவுடன் இலங்கை கூட்டணி அமைத்துக் கொள்வதில் முனைப்புடன் செயல்படுவதாக விளங்கிக் கொள்ளலாமா என்ற கேள்வி நியாயமானதாகவே தெரிகிறது. அதுவே யதார்த்தமானதுமாகும். தற்போதைய இலங்கையின் களத்தை மிகத் தெளிவாக ஜனாதிபதி அமெரிக்க கூட்டு கையாண்டு வருகிறது.

ஏறக்குறைய உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் மறுபக்கம் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அணியினரை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. அதிலிருந்து மீள்வதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்பதை ஜனாதிபதியின் விசாரணை ஆணைக்குழு தீர்மானிக்கும். பாராளுமன்ற விவாதம் அதில் இன்னோர் பக்கத்தை சாத்தியப்படுத்தும். ஆனால் இதில் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் மீதான குற்றச்சாட்டு வலுவடைகிறது. அமெரிக்கா உட்பட மேற்குலகத்தின் இலக்கான ராஜபக்ஷ குடும்பம் மீதான கவனத்தை கொண்டதாக அமைந்திரந்தாலும் நடைமுறை என்னவோ ஒரு தனிநபரை நோக்கி நகர்கிறது. இத்தாக்குதல் ஒரு தனிநபர் திட்டமிட்டது கிடையாது என்பது மட்டுமல்ல நீண்டகாலத் திட்டமிடலாகவும் அமைந்துள்ளது. ஆனால், பாராளுமன்ற விவாதம் என்னவோ ஒரு தனிநபரை அதிகம் முதன்மைப்படுத்துவதாக அமைகிறது. அமெரிக்க-ரணில் கூட்டு எடுக்கும் நகர்வுகளை சீனா-ஹம்பாந்தோட்டை முறியடிப்பது வழமையான உள்நாட்டு அரசியலாக மாறியுள்ளது. அதற்கான களமாகவே பாராளுமன்றம் அமைந்துள்ளது. கடந்த காலங்களிலும் இத்தகைய போட்டி நிலவியிருந்தது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் அமெரிக்கா மற்றும் மேற்குலகம் ரணில்விக்கிரமசிங்கவின் அதிகாரத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை முதன்மைப்படுத்தி வருகிறது. அத்தகைய நடவடிக்கை மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி கொள்வது பற்றியதாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி இந்தோ-பசுபிக் நாடுகள் மத்தியில் அமெரிக்காவை குறை கூறாது உரையாற்றுவதில் கவனம் செலுத்தியிருந்தார் என்பது அவ்வுரையை அவதானிக்கும் எவரும் கண்டு கொள்ளலாம். அதன் மூலம் இரு தரப்பினது தந்திரோபாயம் தெளிவாகவே உணரமுடிகிறது. தென்பசுபிக் கடலானது அமெரிக்காவின் கடற்படைக்கு உகந்ததென்ற விவாதத்தை வெளிப்படையாகவே ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அத்தகைய விவாதம் சீனா, இந்தியாவை சீண்டுவதாக அமைந்தாலும் அதனை எதிர்கொள்ள ஜனாதிபதி தயாராக உள்ளார் என்பதே அதன் சாரம்சமாக தெரிகிறது. அப்படியாயின் சீனாவுக்கும் இலங்கைக்கான உறவு எத்தகையது என்ற கேள்வி முதன்மைப் படுத்தப்பட வாய்ப்புள்ளது.

அதாவது சீனாவுக்கும் இலங்கைத் தீவுக்குமான உறவு அமெரிக்க நலனினால் காவுகொள்ளப்படுமா என்ற சந்தேகம் தவிர்க்க முடியாதது. ஆனால் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் அமெரிக்க நட்பானது நீண்டதும் நிலையானதும் என்பது

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– T.K.கணேசலிங்கம் –



எல்லோரும் அறிந்ததென்றே. அதற்காக இலங்கையின் நலன்களை அதாவது சிங்கள மக்களின் தேச நலனை நிராகரித்து விட்டு அமெரிக்காவின் நட்பு கொள்ளும் ஒர் அரசியல்வாதியாக ரணில் விக்கிரமசிங்க இல்லை என்பதும் கடந்த கால அனுபவமாக உள்ளது. அதனையே நியுயோர்க் ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

இலங்கைத்தீவின் நலனையும் ரணில் விக்கிரமசிங்கவின் நலனையும் ஒன்றாக ஒருங்கிசைக்கும் தலைவராகவே ரணில் காணப்படுகின்றார். அதில் கொஞ்சம் அமெரிக்க நலனும் இணைக்கப்பட்டுள்ளது. அதற்காக ரணில் அமெரிக்காவை கைவிட மாட்டார் என்று கூறி விட முடியாது.

அமெரிக்காவை விவாகரத்து செய்து விட்டு சீனாவுடன் நட்புக் கொள்ள தயங்காதவர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ரணில் கடந்த காலப் பிரதமர் பதவியில் இருக்கும் போது உணரக் கூடியதாக இருந்தது. சீனாவுடனான நட்பினையும் அமெரிக்கவுடனான நட்பினையும் கையாண்டதுடன் BRI உடன்பாட்டில் இலங்கையின் நெருக்கத்தை வெளிப்படுத்தியதை காணக் கூடியதாக அமைந்திருந்தது. பீஜிங்கிலிருந்து புதுடில்லிக்கும் வோசிங்டனுக்கும் விஜயம் செய்ததை மறுக்க முடியாது. அத்தகைய ரணில் விக்கிரமசிங்க இலங்கைத்தீவின் நலனில் (17ம் பக்கம் பார்க்க)



# முற்றிலும் இலவசம்! CSI இன் மின்னியல் தொழில்நுட்ப 4 மாத பயிற்சி திட்டம் ஆரம்பம்

கனடா, மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களில் உள்ள வேலைப் பற்றாக்குறை, வேலைக்குத் தயாராக இருக்கும் பணியாளர்களை உருவாக்குவதற்கான அதி நவீன பயிற்சிகளை வழங்குவதற்கு உயர் தகுதி வாய்ந்த முதலாளிகளுடன் கூட்டுச் சேர்வதற்கு ஒரு மூலோபாய முடிவை எடுத்தது.

அதன் ஒரு அங்கமாக CSI தொழிலாளர், குடிவரவு, பயிற்சி அமைச்சகத்துடன் (Ministry of Labour Immigration Training and Skills Development [MLITSD] கூட்டு சேர்ந்துள்ளது.

மற்றும் திறன் மேம்பாடு (MLITSD) 'ஸ்கார்பரோ தொழில்நுட்ப அறிவை வழங்க ஹப் புரோகிராம்', கல்வி, பயிற்சி, எலக்ட்ரானிக் டெக்னாலஜி துறையில் வேலைக்குத் தயாராக உள்ள பங்கேற்பாளர்களை உருவாக்கவும்

CSI அதன் அதிநவீன வசதி கொண்ட பயிற்சி ஆய்வுகூடம், மற்றும் இந்த 4-மாத திட்டத்தின் மூலம் நடைமுறை அனுபவத்தை வழங்கும் திறனுக்காகவும் மற்றும் 33 ஆண்டுகளாக இத் துறையில் அனுபவம் கொண்ட CSI, அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சமூகப் பொறுப்பாளர் என்ற வகையிலும் மற்றும் பரோபகாரம் மீதான CSI இன் ஆர்வத்தின் தொடர்ச்சியாக, இந்தத் திட்டம் அரசாங்கத்தின் இலக்குகளுக்கு சாதகமான பங்களிப்பையும் செய்து சிறந்த பயிற்சி பெற்ற பணியாளர்களை உருவாக்கவும் CSI தன் பங்களிப்பை செய்யவுள்ளது. இந்த மாணவர்களை அர்த்தமுள்ள கோட்பாட்டு மற்றும் பயிற்சி அமர்வுகளுக்கு உட்படுத்துவதற்காக CSI ஒரு நவீன வகுப்பறை மற்றும் உலகத்தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தையும் அமைத்துள்ளது.

மற்றும் திறன் மேம்பாடு (MLITSD) 'ஸ்கார்பரோ தொழில்நுட்ப அறிவை வழங்க ஹப் புரோகிராம்', கல்வி, பயிற்சி, எலக்ட்ரானிக் டெக்னாலஜி துறையில் வேலைக்குத் தயாராக உள்ள பணியாளர்களை உருவாக்கவும் இச் செயல்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

சிக்கலான சர்க்யூட் போர்டுகளை சரி செய்து, செயல்படுத்துதல் அவர்களை திறமையான மின்னணு தொழில்நுட்ப வல்லுனர்களாக பயிற்றுவிக்க வேண்டும் என்பதற்காக இந்த 4 மாத பகுதி நேர பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச பயிற்சி மூலம் பலர் குறிப்பாக கனடா நாட்டுக்கு புதிதாக வருபவர்கள், வளரும் அடுத்த சந்ததியினர் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. நாட்டில் தொழிற்சந்தையில் மின்னியல் துறைகளில் ஆளணி வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் இந்த பயிற்சிகள் பெரிதும் உதவும்.

MLITSD பயிற்சி திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

இன்றைய கால கட்டத்தில் தொழில்நுட்ப மாற்றத்திற்கேற்ப கனடாவுக்கு தேவையான உள்நாட்டு பணியாளர்களை உருவாக்குதல்.

பணியிடத்தில் நுழைவதில் அதிக தடைகளை எதிர்கொள்ளும் வேலை தேடுபவர்களுக்கு வழி வகுத்தல்.


வளர்ந்து வரும் தொழிலாளர் சந்தை தேவைகளைப் பூர்த்தி செய்ய நிகழ் நேர முதலாளிகளுடன் கூட்டுசேர்தல்.


CSI மின்னியல் தொழில்நுட்ப நான்கு மாத பயிற்சி திட்டம் முற்றிலும் இலவசம்.

அதி நவீனத்தில் நடைமுறைப் பயிற்சி வசதி. பயிற்சி முடிவில் சான்றிதல். வேலை வாய்ப்பு உதவி.










# CSI – ELECTRONIC TECHNOLOGY PROGRAM

It is offered **FREE** of charge to the participant

Canada | EMPLOYMENT ONTARIO | Ontario

Ontario's employment and training network.

SCAN TO REGISTER

CSI has partnered with the Ministry of Labour, Immigration, Training, and Skills Development (MLITSD) to deliver 'Scarborough Techknowledge Hub Program', a cutting-edge and hands-on program to educate, train, and produce work-ready participants in the field of Electronic Technology.

Participants will gain knowledge on how to assemble, diagnose, troubleshoot and repair complex circuit boards, in order to enable them to become proficient electronic technicians.




## This program will compliment MLITSD's main objectives:

- Creating a resilient workforce to keep pace with changes in technology
- Paving a way for job seekers who face higher barriers of entry into the work force
- Partnering with real-time employers to meet the demands of emerging labour market needs

## CSI – ELECTRONIC TECHNOLOGY PROGRAM


**It is offered FREE of charge to the participant**

- 4-Month Course delivery
- Practical Training at our state-of-the-art facility
- Employment assistance




For further details and apply, please go to:
https://www.thecsi.com/skills-development-program.html


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்சனைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.





ரஷபராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். வாழ்க்கை துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார்.





மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது.





கடகராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.





சிம்மராசி அன்பர்களே! நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாகநேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.





விருச்சிகராசி அன்பர்களே! நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புதுமையை செய்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம்.







தனுசுராசி அன்பர்களே! கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும் கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையை சிறப்பாக செய்து முடிப்பர்.




மகரராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்.




மீனராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசிஅவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்ப வர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.



## நீதிபதி சரவணராஜா மனநலம் பாதிக்கப்பட்டவராம்!

(3ம் பக்கத் தொடர்ச்சி) அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார். இதில், குறித்த நீதிபதி மனநலம் பாதிக்கப் பட்டவர் என்றும் மனநல வைத்தியர்கள், இவருக்கு வைத்தியம் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நீதிபதி கூறுவாராயின், அது யாரால் என்பதை அவர் வெளிப்படையாகக் கூற வேண்டும். ஜனாதிபதி, பொலிஸ் அமைச்சர் உள்ளிட்டோர், இந்த விடயம் தொடர்பாக விசாரணை செய்ய குழுக்களை நியமித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை செய்து, உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று நாமும் கேட்டுக் கொள்கிறோம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வலிந்து மூக்கை நுழைத்த அலி சப்ரி

(18ம் பக்கத் தொடர்ச்சி) இரண்டு வாரங்களுக்கு முன்னர் கூட ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், கோட்டாபய ராஜபக்ஷவை பாதுகாத்தது தனது வாழ்நாளின் முக்கியமான சாதனை என்று குறிப்பிட்டிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறான ராஜபக்ஷ விசுவாசிக்கு கனடாவின் மீது காழ்ப்பு வருவதற்கு மற்றொரு காரணம் இருக்கலாம்.

மஹிந்த ராஜபக்ஷவையும், கோட்டாபய ராஜபக்ஷவையும் கனடா அண்மையில் கறுப்புப் பட்டியலில் சேர்த்து பயணத் தடை விதித்திருப்பது தான் அந்த காரணம். ராஜபக்ஷவினரை கறுப்புப் பட்டியலில் சேர்த்ததை கண்டித்த அலி சப்ரி, தீவிரவாதிகளின் புகலிடம் என கனடாவை விமர்சித்தது ஆச்சரியமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் கனடாவுக்கு எதிராக கருத்தை வெளியிட்டு இந்தியாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்த முற்படுவதற்கும் காரணங்கள் உள்ளன.

எவ்வாறாயினும், கனடிய– இந்திய மோதல் நிரந்தரமானதாக இருக்கும் எனக் கூற முடியாது. இதற்குள் தேவையற்ற கருத்துக்களை வெளியிட்டு இலங்கை தன்னைத் தானே அந்நியப்படுத்திக் கொள்ளப் போகிறது போலவே தெரிகிறது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HomeLife Higher Standards
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6





OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HomeLife Higher Standards
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
- Life Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Super Visa Insurance
- RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS



BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com

இரா. சம்பந்தனின்
விழியும் துளியும்
சிறுகதைத் தொகுதி வெளியீடு




சனிக்கிழமை
ஒக்ரோபர் 14, 2023
மாலை 5 மணி
கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய மண்டபம்
635 Middlefield Rd,
Scarborough
தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஈழநாடு பதிப்பகம்

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.



விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

